பக்கங்கள்:13 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 26 வெள்ளிக்கிழமை 06.05.2022 கதிர் 182

### இனி இது ரகசியம் அல்ல!

நேற்று, பிரதி சபாநாயகர் தெரிவில் கடைசி நேரத்தில் ஆளும் கட்சியுடன் அணி சேர்ந்து தன்னை தென்னிலங்கையில் மிகவும் மோசமான பின்னடைவு நிலைக்கு தள்ளப்பண்ணிவிட்டது சுதந்திர கட்சி. அதன் மூத்த நிர்வாகிகள் சிலரே (2)

# நாடு இன்று முடங்கும்!

## முழுநாள் ஹர்த்தாலுக்கு அழைப்பு

கொழும்பு,மே 06

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தற்போதைய அரசாங்கத்தை அதிகாரத்திலிருந்து வெளியேறுமாறு வலியுறுத்தி இன்று நாடளாவிய ரீதியில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

இந்தக் கோரிக்கைகளை முன்னிறுத்தி, நாடு முழுவதும் மக்கள் தன்னெழுச்சியாக ஆர்ப்பாட்டங்களையும் தொடர் போராட்டங்களையும் முன்னெடுத்துத் தமது எதிர்ப்பைக் காட்டி வருகின்றனர். (13)

## தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு மஹிந்தர் பாராட்டுத் தெரிவிப்பு

கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் இலங்கை மக்களுக்கு 123 கோடி இந்திய ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருள்களை வழங்குவதற்கு முன்வந்துள்ள தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நன்றி தெரிவித்துள்ளார்.


தமிழக முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்து அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் –

தமிழக சட்டப்பேரவையில் தாங்கள் கொண்டு வந்த தனித் தீர்மானத்தின்படி இலங்கையில் தற்போது நிலவி வரும் கடும் பொருளாதார (13)

## நாடாளுமன்றச் சந்தி ஆர்ப்பாட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றிணைந்து நேற்றைய தினம் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எதிராக நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

நாடாளுமன்ற வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பெயர்ப் பலகைகள் மீது உள்ளாடைகளைத் தொங்கவிட்டு அனைத்து (13)



## நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தைப் போல் தமிழக ஆலயங்களையும் நிர்வகியுங்கள்!



### பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை கோரிக்கை

யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தைப் போல் தமிழகத்தில் உள்ள ஆலயங்களை நிர்வகிக்க வேண்டும் என்று பா.ஜ.கவின் தமிழகத் தலைவர் அண்ணாமலை தமிழகத்தில் வைத்து தெரிவித்துள்ளார்.

சில நாள்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அவர், யாழ்ப்பாணம் உட்பட பல்வேறுஇடங்களுக்கும்விஜயங்களை மேற்கொண்டிருந்தார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சென்று தரிசனம் (13)

## நாடாளுமன்றத்தின் சுற்றாடலில் 'ஹொரு கோ கம' உருவாக்கம்!

நாடாளுமன்றச் சுற்றாடலில் 'ஹொரு கோ கம' உருவாக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதியை அண்மித்து பல்கலைக்கழக மாணவர்களினால் நேற்று எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது (13)




## தயாசிறி ஓரினத்தை அடையாளப்படுத்தி குற்றம் சுமத்துவதை ஏற்கவே முடியாது!





### சீறுகின்றார் செந்தில் தொண்டமான்

காலி முகத்திடலில் முன்னெடுக்கப்படும் போராட்டம் கட்டுப்பாடுடனும், முன்னுதாரணமாகவும் நடத்தப்பட்டு வருகிறது. இந்த போராட்டத்தில் சிலரின் செயற்பாடுகள் நாகரீகம் அற்றனவாக உள்ளன. தனிப்பட்ட நபரின் செயற்பாட்டிற்காக ஓர் இனத்தை குறைகூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என இ.தொ.காவின் தலைவர் செந்தில் (13)

## எரிபொருள் நிரப்புவதற்கான கட்டுப்பாடுகள் இறுகுகின்றன

எரிபொருள்நிரப்புநிலையங்களில் எரிபொருள் நிரப்பும் போது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் நேற்றுமுதல் கடுமைப்படுத்தப்பட்டுள்ளன என்று பெற்றோலியக் கூட்டுதாபனம் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக மோட்டார் சைக்கிள்களுக்கு அதிகபட்சமாக 2,000 ரூபாவுக்கும், ஓட்டோக்களுக்கு அதிகபட்சமாக 3,000 ரூபாவுக்கும் மட்டுமே எரிபொருள் நிரப்ப முடியுமெனக் கூட்டுதாபனம் குறிப்பிடுகின்றது.

கார், வான்கள் (2)

## இரகசியத்தை உடைத்த சஜித்துக்கு கண்டனம் தெரிவித்தார் சபாநாயகர்



பிரதி சபாநாயகர் தெரிவுக்கான இரகசிய வாக்கெடுப் பின்போது, வாக்களிப்பதற்காகப் பிரவேசித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தமது வாக்கைப் பதிவு செய்த பின்னர் குறித்த வாக்குச்சீட்டைப் பகிரங்கமாக சபையில் தூக்கிப் பிடித்துக் காட்டி (2)

## எரிபொருள்களின் விலை மீள எகிறும்

எரிபொருள்களின் விலை மீண்டும் அதிகரிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


கடந்த மாதம் 18ஆம் திகதி எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்ட போதிலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ந்தும் நட்டத்தைச் சந்தித்து வருகின்றது என வலு சக்தி அமைச்சர் காஞ்சன (2)

## சு.கவின் நாடகம் இப்போது அம்பலம் என்கிறார் சுமந்திரன்

சியம்பலாப்பிட்டியவுக்குப் பதிலாக சியம்பலாபிட்டிய எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

டுவிட்டரில் கருத்து பதிவிட்ட சுமந்திரன் தனது பதிவில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சியம்பலாப்பிட்டியவுக்கு பதிலாக சியம்பலாபிட்டிய. எண்ணிக்கை இப்போது தெளிவாகி விட்டது. (2)



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று தென்னிலங்கையின் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகளின் சிரேஷ்ட ஆசிரியர்களுடன் தொடர்புகொண்டு இது குறித்துக் கலந்துரையாடிய போது தங்களைத் தாங்களே நொந்து கொண்டனர் எனத் தெரியவந்தது. தெரியாமல் இப்படி நடந்து கொண்டு விட்டோம், எல்லாம் பிழைத்துப் போய்விட்டது என்று அழாக் குறையாகக் கூறியிருக்கின்றார் அந்தக் கட்சியின் பிரதான நிர்வாகி ஒருவர்.

"நாங்கள் சுயாதீன அணியில் 40 எம்.பிக்கள் இருக்கிறோம். இப்போது அரசுத் தரப்புடன் சேர்ந்ததால் 148 வாக்குகள் கிடைத்தன. எதிரணியுடன் சேர்ந்திருந்தால் 105 வாக்குகள் (40+65) கிடைத்திருக்கும். ஆளும் தரப்புக்கு 108 வாக்குகள் (148 – 40) கிடைத்திருக்கும். அதிலும் கூட இரகசிய வாக்கெடுப்பு என்பதால் எங்களுக்கு மேலும் சில வாக்குகள் விழுந்திருக்கும். சம்பந்தன் போன்றோர் வாக்களிப்பதற்காக விசேடமாக சபைக்கு வந்து நமக்காக வாக்களித்து இருப்பர். நாம் வென்றிருக்க முடியும். அப்படி வென்றிருந்தால் அது இலங்கை அரசியலில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கும். அதிரடி மாற்றங்களை உருவாக்கி இருக்கும். எல்லாவற்றையும் தவறவிட்டு விட்டோம். அதுமட்டுமல்ல, ராஜபக்ஷக்களின் நிரந்தர எடுபிடிகள்தாம் நாங்கள் என்று மக்கள் கருதும் நிலைமையையும் ஏற்படுத்தி விட்டோம்." – என்று நொந்து இருக்கின்றார் அவர்.

நேற்று முன்தினம் இரவு வரை தங்கள் பிரதிநிதி சியாம்பலப்பிட்டியவை எதிரணி வேட்பாளராக களமிறக்கும் திட்டத்தில் தான் இருந்தது சுதந்திரக் கட்சி.

அதற்காக சஜித்தின் கட்சி, தமிழ்க் கூட்டமைப்பு, ஜே.வி.பி. என அனைத்து எதிரணித் தரப்பினருடனும் சு.கவின் செயலாளர் தயாசிறி ஜயசேகர பேச்சு நடத்திக்கொண்டிருந்தமை பற்றி நேற்று இப்பத்தியில் விலாவாரியாகக் குறிப்பிட்டிருந்தேன்.

அப்படி சு.கவினர் எதிரணியுடன் நின்றால் ஆளும் பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் தோற்பதற்கு சாத்தியங்கள் உண்டு என்பதை ஊகித்த மொட்டுக் கட்சி, தாங்களும் சு.கவின் வேட்பாளரை ஆதரிப்பது என்ற முடிவுக்கு வந்துள்ளனர். இது குறித்து நேற்றுக் காலை சு.கவின் செயலாளர் தயாசிறி ஜயசேகரவுக்கு மொட்டுக் கட்சித் தலைமையினால் தெரியப்படுத்தப்பட்டது.

தமது வேட்பாளரை எதிர்க்கட்சிகள் எல்லாம் ஆதரிக்கும் நிலையில், அரசுத் தரப்பும் ஆதரித்தால் அவர் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவாகி விடுவார் என அகமகிழ்ந்து ஆசுவாசப் பட்டுக் கொண்டது சு.க.

ஆனால், அந்த ஆசுவாசம் நீடிக்கவில்லை. சு.க. வேட்பாளரை ஆளும் மொட்டுக் கட்சியும் ஆதரிக்கின்றது என்ற குறுஞ்செய்தி சமூக ஊடகங்களில் வந்ததுமே, முதலில் உஷாரானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புதான். அரசுத் தரப்பு – ராஜபக்ஷ தரப்பு – ஆதரிக்கும் வேட்பாளரைத் தாங்களும் ஆதரிக்க முடியாது என்று சீறினார் சுமந்திரன்.

உடனடியாகவே தங்களின் மற்றைய பங்காளிக் கட்சித் தலைவர்களுடன் அவர் கலந்தாலோசித்தார்.

மற்றைய தரப்புக்கள் எல்லாம் சேர்ந்து சியாம்பலப்பிட்டியவை நிறுத்தினாலும், போட்டி வேட்பாளராக ஒருவரைத் தமிழ்க் கூட்டமைப்பு நிறுத்துவது என்று முடிவாயிற்று. எல்லோருமாக பேசித் தங்கள் வேட்பாளராகச் சித்தார்த்தனை நிறுத்த முடிவு செய்தனர். அவரும் அதற்குச் சம்மதித்தார்.

அந்த முடிவை ஜே.வி.பிக்கும், ஐக்கிய மக்கள் சக்திக்கும் அறிவித்தார் சுமந்திரன்.

"நீங்கள் எல்லோரும் சேர்ந்து சியாம்பலப்பிட்டியவை ஆதரித்தால் நாங்கள் தனித்து சித்தார்த்தனை எதிராக நிறுத்துவோம்" – என்றார் சுமந்திரன்.

மற்றைய இரண்டு கட்சியினரும் – ஜே.வி.பியினரும், சஜித்தின் கட்சியினரும் – தாங்கள் தங்கள் தலைவர்களுடன் பேசிவிட்டு வருகின்றனர் என்று பதிலளித்தனர்.

உடனடியாகவே ஜே.வி.பியிடம் இருந்து பதில் சுமந்திரனுக்கு வந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறுத்தும் சித்தார்த்தனைத் தாங்கள் ஆதரிப்பார்கள் என்று உறுதி கூறப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியிடம் இருந்து சற்று தாமதித்துப் பதில் வந்தது.

"அரசுத்தரப்பு ஆதரிக்கும் வேட்பாளரை நாங்களும் ஆதரிக்க மாட்டோம். நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து எங்கள் வேட்பாளராக இம்தியாஸ் பாக்கீர் மாக்காரை நிறுத்துவோம்" – என சஜித்தின் கட்சி தெரிவித்தது. எதிரணிக்குள் இணக்கம் ஏற்பட்டது.

இதற்குள் 'தொலுக்கு முதலி' வேலை செய்யப் புறப்பட்ட ரணில் விக்கிரமசிங்க கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனிடம் தாராளமாக வாங்கிக் கட்டினார் என்று தெரிகிறது.

"சு.க. இப்போதுதான் எதிரணிப் பக்கம் வந்து இருக்கின்றது. அவர்கள் திரும்பவும் ராஜபக்ஷக்கள் பக்கம் சாய்ந்து விடாமல் நாங்கள் அவர்களை அரவணைத்துக் கொள்ள வேண்டும். எனவே சியாம்பலப்பிட்டியவையே எதிரணியான நாங்கள் ஆதரிக்க வேண்டும்'' – என்று கூறினார் ரணில்.

அவருக்கு முகத்துக்கு நேரேயே போட்டுப் பிடித்தார் சுமந்திரன்.

"சு.கவினர் நடத்துவது முழு நாடகம். அவர்கள் அங்கு ஒரு காலும் இங்கு ஒரு காலும் வைத்துக் கூத்து நடத்துகின்றார்கள். அது புரியாமல் அவர்களுக்காக வக்காலத்து வாங்க வந்து விட்டீர்களே!" – என்று ரணிலை முகத்துக்கு நேரேயே வைதார் சுமந்திரன்.

சுமந்திரனிடம் தமது விவகாரம் அவியவில்லை என்று கண்ட ரணில், அதன் பின்னர் கூட்டமைப்பின் மற்றைய எம்.பிக்கள் சிலரையும் தனித்தனியாகச் சந்தித்து மனம் மாற்ற முயற்சித்தார் எனத் தெரிகின்றது. இதனால் சீற்றமுற்ற கூட்டமைப்பின் சாணக்கியன் நேற்றைய தெரிவின் பின்னர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில், ரணிலையும் சேர்த்துப் பொரிந்து தள்ளினார். "சியாம்பலப்பிட்டியவை ஆதரித்த 148 எம்.பிக்களும் ராஜபக்ஷக்களுடன்தான் உள்ளனர். மறுபக்கத்தில் வாக்களித்த 65 பேர் தான் இலங்கை மக்களுடன் உள்ளனர்" – என்று கூறிய அவர், அரசுத் தரப்பின் வேட்பாளரை ஆதரிக்கும்படி கோரி ரணில் விக்கிரமசிங்க எதிரணி எம்.பிக்கள் ஒவ்வொருவரையும் தேடித்தேடித் தனித்தனியாகச் சென்று 'காவடி' எடுத்தார் எனத் தமது உரையில் வைதார்.

சாணக்கியனின் நேற்றைய சிங்கள உரை நாடளாவிய ரீதியில் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் அதிர்வலைகளை உருவாக்கி இருப்பதை என்னால் அறிய முடிந்தது. மூன்று சிங்கள ஊடகவியலாளர்கள் என்னுடன் தொடர்பு கொண்டு அவரது உரையைச் சிலாகித்தனர்.

"சிங்கள மக்களின் மனதைத் தொடக் கூடியதாக – அப்படிச் சொல்லாடல்களை வெளிப்படுத்தக் கூடிய – உரையாளர்கள் சிங்களத் தலைவர்கள் மத்தியிலும் வெகு குறைவு. இன்றைய (நேற்றைய) பேச்சின் பின்னர் உங்கள் சாணக்கியனைக் கொழும்பில் தேர்தலில் நிற்கச் சொல்லுங்கள். நிச்சயம் விமல் வீரவன்ஸவை விட அவர் அதிக வாக்குகளைக் கொழும்பில் எடுப்பார். அவரது சிங்களத்துக்கு அப்படி ஒரு கவர்ச்சி இருக்கின்றது." – என்றார் ஓர் ஊடகவியலாளர்.

"இன்றைய (நேற்றைய) அவரது பேச்சு தென்னிலங்கையின் சிங்களப் பாமரன் ஒவ்வொருவனினதும் எரிச்சலை, சீற்றத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது. சிங்கப்பூரில் இருந்து வயது போன சிங்களப் பெண்மணி ஒருவர் என்னுடன் பேசினார். தமிழ் எம்.பி. ராசமாணிக்கத்தைப் பார்த்து உங்கள் சிங்கள எம்.பிக்களைப் பேசப் பழகிக் கொள்ளச் சொல்லுங்கள் என்று என்னிடம் கூறினார்." – என்றார் அந்தப் பத்திரிகையாளர்.

எல்லாப் புகழும் சாணக்கியனைக் களத்துக்குக் கொண்டு வரச் செய்தவருக்கே...!

★ ★ ★

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கை மக்களுக்கு உடனடி நிவாரண பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்களை விரைந்து உதவுவதற்கு முன்முயற்சிகளை எடுத்திருக்கும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு இலங்கைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதியிருக்கிறார். நல்ல பண்பியல்பு. வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

இந்தக் கடிதத்தின் பிரதியை மனோ கணேசன் எம்.பிக்கும், சுமந்திரன் எம்.பிக்கு பிரதமர் அனுப்பி இருப்பாராயின் இன்னும் பொருத்தமாக இருக்கும்.

இந்த உதவிப் பொருள்களை இலங்கையில் அல்லற்படும் தமிழ் மக்களுக்கென அனுப்பவே தமிழக முதல்வர் ஆயத்தப்படுத்தினார். அந்த வழியில் இந்த முயற்சி தொடர்ந்திருக்குமானால் அது இந்திய மத்திய அரசு, கொழும்பு அரசு ஆகியவற்றைத் தாண்டி பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கிடைக்கச் சாத்தியப்பட்டிருக்கும் என்று நான் நம்பவில்லை.

ஆனால் 'தமிழர்களுக்கு என்று அனுப்பாதீர்கள். இங்கு நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்துதான் துன்ப துயரங்களை – நெருக்கடிகளை – அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். எங்கள் எல்லோருக்குமாக – சகல இலங்கையர்களுக்குமாக – அவற்றை அனுப்புங்கள்!' என்று மனோ கணேசனும் சுமந்திரனும் தான் துணிந்து வெளிப்படையாகக் கூறி, தமிழக முதல்வருக்குப் பரிந்துரை செய்தனர். அவர்களின் வழிப்படுத்தல் – மனித மாண்பு – கண்டு தாம் நெகிழ்ந்துவிட்டார் என குறிப்பிட்ட தமிழக முதல்வர், அதன்படி முழு இலங்கையர்களுக்குமாக வேறுபாடின்றி பொருள்கள் மற்றும் உதவிகளை அனுப்ப முயற்சி எடுத்துள்ளார். அதனால் அவை இலங்கை மக்களுக்கு விரைந்து கிட்டும் வாய்ப்புகளும் ஏற்பட்டுள்ளன.

தமிழக முதலமைச்சரை இலங்கைப் பிரதமர் நன்றியுடன் பாராட்டிச் சிலாகிப்பது மகிழ்வுக்குரியதுதான். அந்தச் சமயத்தில், விமர்சனங்களைப் பொருட்படுத்தாமல் நியாயத்தை துணிந்து, பகிரங்கமாக உரைத்த மனோ கணேசன், சுமந்திரன் போன்றோரின் தற்றுணிவான அந்தச் செயற்பாட்டை மெச்சுவதும் நமது கடமை அல்லவா?

– மின்னல் –

## சு.கவின் நாடகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை நாடாளுமன்றத்தில் உண்மையான எதிர்க்கட்சி 65 (இன்று இல்லாதவர்கள் ஐந்து பேர் இருக்கலாம்). அதிருப்தியாளர்களின் நாடகம் இன்று அம்பலமானது எனக் குறிப்பிட்டார்.

பிரதி சபாநாயகர் பதவியை இராஜினாமா செய்த ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய நேற்று வாக்கெடுப்பின் மூலம் மீண்டும் பிரதி சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்டுள்மை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திலிருந்து விலகிவிட்டதாக அண்மைய நாட்களில் அரங்கேற்றி வந்த விவகாரம் நாடகம் என்பது இப்போது அம்பலமாகியுள்ளது எனவும்

எம்.ஏ.சுமந்திரன் மற்றொரு பதிவில் தெரிவித்துள்ளார்.

ரஞ்சித் சியாம்பலப்பிட்டியவின் பெயர் பிரதி சபாநாயகர் பதவிக்கு மீண்டும் அரசு ஆதரவுடன் பரிந்துரைக்கப்பட்டுள்ளமையானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திலிருந்து விலகிவிட்டதாக அண்மைய நாள்களில் அரங்கேற்றிய நாடகத்தை அம்பலப்படுத்தியுள்ளது எனப் பதிவிட்டுள்ளார்.

(மற்றொரு செய்தி 4ஆம் பக்கத்தில்...)

## இரகசியத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதை வெளிப்படுத்தியிருந்தார்.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவரின் செயற்பாடு முற்றிலும் தவறானது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

வாக்களிப்பவர்களின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும் என்றும், நாடாளுமன்ற செயலாளர் நாயகம் அதற்கு பொறுப்பு என்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

எனினும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தான் வாக்களித்த வாக்குச் சீட்டைக் காண்பித்தபோது, முஜிபுர் ரஹ்மான், ஹர்ஷன ராஜகருணா உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதனை கைபேசியில் படம் பிடித்தனர்.

உறுப்பினர்களின் பெயரைக் குறிப்பிட்டு, புகைப்படம் எடுப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என எச்சரித்த சபாநாயகர், இரகசியத் தன்மை பற்றிப் பேசிக் கொண்டு இவ்வாறு செயற்படுவது முற்றிலும் தவறு என்றும் தெரிவித்தார்.

## எரிபொருள்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விஜயசேகர தெரிவித்துள்ளார்.

விலைகள் அதிகரித்துள்ள போதிலும் டீசல் மற்றும் பெற்றோல் ஆகியவை நட்டத்திலேயே விற்பனை செய்யப்படுகின்றன. மண்ணெண்ணெய்யும் குறைவான விலையிலேயே விற்பனை செய்யப்படுகின்றது.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி மற்றும் மசகு எண்ணெய் விலை அதிகரிப்புக் காரணமாக நட்டம் அதிகரித்து வருகின்றது. ஏப்ரல் 18ஆம் திகதி விலை அதிகரிக்கப்படுவதற்கு முன்னர் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நாளாந்த நட்டம் 161 கோடி ரூபாவாகும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அமைச்சரின் கருத்திற்கமைய எரிபொருள்களின் விலை மீண்டும் அதிகரிக்கப்படலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

## எரிபொருள் நிரப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் ஜீப்களுக்கு அதிகபட்சமாக 8,000 ரூபாவுக்கு எரிபொருளை நிரப்ப முடியும் பஸ், லொறி மற்றும் வணிகப் பயன்பாட்டு வாகனங்களுக்கு இந்தக் கட்டுப்பாடுகள் செல்லுபடியாகாது எனவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

எரிபொருளுக்கு மீண்டும் தட்டுப்பாடு நிலவி வருகின்ற நிலையிலேயே இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road, Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மக்கள் போராட்டமே வழி!

**பதவிக்காகவும், பவிசுக்காகவும், அதிகாரங்கள், அரச செல்வாக்கு மற்றும் வருமானங்களுக்காகவும் ராஜபக்ஷக்களுடன் ஒட்டிக் கொண்டவர்கள் அவற்றைச் சூறையாடிச் சுகிப்பதற்குக் கிடைத்துள்ள கடைசிச் சந்தர்ப்பம் வரை அவற்றை விட்டு விலகவே மாட்டார்கள் என்பது நேற்றுப் பிரதி சபாநாயகர் தேர்வில் நிரூபணமாகியுள்ளது.**

**நாய் செத்தால்தான் உண்ணிகள் கழறும் என்பது தானே நாம் காணும் பாடம்...? நாய் சாகும் வரை அவை ஒட்டி இரத்தத்தை உறிஞ்சிக் கொண்டுதான் இருக்கும்.**

**ராஜபக்ஷக்களை ஒட்டி நின்று தங்களை வளர்த்து, வலுப்படுத்தி, நிலைப்படுத்திக் கொண்டவர்கள் எல்லோரும், இன்னமும் அவர்களைச் சூழ்ந்து கொண்டுதான் நிற்கின்றார்கள் என்பது தெளிவு.**

**இந்த வருட முற்பகுதி வரை ராஜபக்ஷக்களுக்கு முண்டு கொடுத்து வந்த இந்த அணியினரால்தான் ரஞ்சித் சியாம் பலப்பிட்டிய பிரதி சபாநாயகராக முன்னர் தெரிவு செய்யப்பட்டார். அதே குழுவினர் அப்படியே அவரை மீண்டும் அதே பதவிக்குத் தெரிவு செய்திருக்கின்றனர்.**

**அப்படியானால் – இடையில் சியாம்பலப்பிட்டிய தமது பதவியை இராஜினாமாச் செய்து, மீண்டும் தேர்வில் நின்று, அதே அணியின் ஆதரவுடன் அதே பதவிக்குச் செல்வதானால் – அவர் ஏன் தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும்? ஏன் அரச நிதி, நாடாளுமன்றத்தின் பெறுமதி மிக்க நேரம் போன்றவற்றை எல்லாம் வீணடிக்க வேண்டும்?**

**ராஜபக்ஷக்களை விட்டு வெளியேறி வந்து விட்டோம், எதிரணியின் ஆதரவுடன் சியாம்பலப்பிட்டியவை பிரதி சபாநாயகராக்கி எங்கள் கொள்கை நிலைப்பாட்டை வெளிப்படுத்தப் போகின்றோம் என்றெல்லாம் கூறிக் கொண்டு, நேற்று முன்தினம் எதிர்க்கட்சிகள் ஒவ்வொன்றுடனும் பேச்சு நடத்தினார் சு.கவின் செயலாளர் தயாசிறி ஜயசேகரா.**

**பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. எல்லாம் அதற்கு இணங்கின – ஒரெயொரு நிபந்தனையுடன்.**

**சியாம்பலப்பிட்டிய உட்பட சு.கவினர் அரசுத் தரப்பிலிருந்து வெளியேறி, குறுக்கறுத்து, எதிர்க்கட்சிகள் தரப்புக்கு வந்து எதிர்க்கட்சியினராக அமர்வர் என்றால் சியாம்பலப்பிட்டியவை ஒரு மனதாக – எதிர்க்கட்சி வேட்பாளராக – அறிவித்து ஆதரிப்போம் என்று அவை தெரிவித்தன.**

**ஆட்சி, அதிகாரம், பதவி, பவிசு, வருமானங்களை எதிர்பார்த்து நிற்கும் இந்த மூன்றாம் நிலை – தர – தரப்புகள் அவற்றைக் கைவிட்டு எதிர்க்கட்சிகள் தரப்புக்கு வரத் தயாரில்லை. அதைத்தான் நேற்றைய பிரதி சபாநாயகர் தெரிவு தெளிவாக உறுதிப்படுத்திக் காட்டியிருக்கின்றது.**

**சுதந்திரக் கட்சியினரின் இந்தக் குழப்பப்போக்கு எதிர்காலத்தில் ராஜபக்ஷக்கள் தரப்பை விட்டு, இப்போது போலல்லாது 'உண்மையில்' சு.க. வெளியில் வந்தாலும் கூட அதை நாடும், மக்களும், பிற எதிர்க்கட்சிகளும் நம்ப முடியாத முன்னுதாரணமாக்கி விட்டது.**

**ராஜபக்ஷக்களையும், மொட்டுக் கட்சியையும் ஒதுக்கி, புறந்தள்ளி விட்டு பிற கட்சிகள், தரப்புகள் சேர்ந்து இடைக்கால அரசை – அல்லது காபந்து அரசை – அல்லது சர்வ கட்சி அரசை – அல்லது ஒருமித்த தேசிய அரசை – அமைப்பதற்கான வாய்ப்பையும், நம்பகத் தன்மையையும் கூட சு.க. தரப்பின் இத்தகைய செயற்போக்கு முழுமையாகச் சிதறடித்து விட்டது என்பது கவனிக்கப்பட வேண்டிய உண்மை.**

**ராஜபக்ஷக்களையும், அவர்களது அரசையும் வீட்டுக்கு அனுப்பும் நியாயமான செயற்பாட்டில் இப்போதுள்ள நாடாளுமன்றம் ஆக்கபூர்வமாகப் பணியாற்ற முடியும் என்ற நம்பிக்கையையும் ஆளும் தரப்பு – சு.க. கூட்டின் இந்தச் செயற்பாடு தகர்த்து விட்டது. ராஜபக்ஷக்களைத் துரத்த மக்கள் போராட்டம் ஒன்றே வழி என்ற உண்மையையும் நேற்றைய நாடாளுமன்ற நடவடிக்கைகள் மக்களுக்கு பொறி தட்டுமாற்போல எடுத்தியம்பியிருக்கின்றன என்பதும் கவனிக்கத் தக்கது.**

## அரசில் இருந்து வெளியேறியுள்ளோம் எனக் கூறியவர்களின் நாடகத்தை பிரதி சபாநாயகர் தெரிவு அம்பலப்படுத்தியது!

### சுமந்திரன் சாட்டை



பிரதி சபாநாயகர் தெரிவு அரசாங்கத்தில் இருந்து வெளியேறிவிட்டோம் எனக் கூறியவர்களின் நாடகத்தை அம்பலப்படுத்தியுள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

டுவிட்டரில் நேற்று (வியாழக்கிழமை) வெளியிட்டுள்ள பதிவிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பதிவில் 'பிரதி சபாநாயகர் பதவிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் முன்மொழியப்பட்டுள்ள ரஞ்சித் சியம்பலாபிட்டியவுக்கு ஆதரவு வழங்குவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஏனைய சிலர் அரசாங்கத்திலிருந்து விலகி விட்டனர் என அண்மைய நாள்களில் அரங்கேற்றிய நாடகத்தை இது அம்பலப்படுத்தியுள்ளது எனப் பதிவிட்டுள்ளார்.

## நாடளாவிய ரீதியில் எரிபொருளுக்கு மீண்டும் நீண்ட வரிசையில் மக்கள்!

*நாடளாவிய ரீதியில் நேற்றும் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் நீண்ட வரிசைகளில் மக்கள் காத்துக்கிடந்தனர்.*

*இதன் காரணமாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.*

*அத்தோடு பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டு காணப்படுகின்றன.*

*இந்நிலையில் நாட்டில் நீண்டகாலமாக எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் மண்ணெண்ணெய்யை பெற்றுக்கொள்வதற்கும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தமையை அவதானிக்க முடிந்தது. இருப்பினும், இந்திய கடன் உதவியின் கீழ் 40 ஆயிரம் மெற்றிக் தொன் பெற்றோல் கொழும்பை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

## வல்லை மதுபானசாலை கொலை; சந்தேகநபர்கள் இருவர் சரண்!

### பிரதான சந்தேகநபர் உள்ளிட்ட இருவர் தலைமறைவு

யாழ்ப்பாணம் வல்லை பகுதியில் அமைந்துள்ள மதுபானசாலையில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் இருவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் – பருத்தித்துறை வீதியில் வல்லை பகுதியில் அமைந்துள்ள மதுபான நிலையத்தில் கடந்த 3ஆம் திகதி இரவு இரு இளைஞர்கள் குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட தர்க்கம் போத்தல் குத்தில் முடிவடைந்ததில் திக்கம் பகுதியைச் சேர்ந்த குணசேகரம் குணசோதி (வயது 25) எனும் இளைஞன் உயிரிழந்திருந்தார்.

சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் கொலை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனும் சந்தேகத்தில் நால்வரை அடையாளம் கண்டிருந்தனர்.

அவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருந்த நிலையில் அல்வாய் பகுதியைச் சேர்ந்த இருவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளனர்.

அதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட இருவர் தொடர்ந்தும் தலைமறைவாகியுள்ளனர் எனவும், அவர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும், சரணடைந்துள்ள இருவரும் அன்றைய தினம் பிரதான சந்தேகநபருடன் மது அருந்திய நபர்கள் எனவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## புதிய விமானங்களை கொள்வனவு செய்வதற்கான முடிவை ஒத்திவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது!

### ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு சரித ஹேரத்தால்

கொழும்பு, மே 06

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் பொது நிறுவனங்கள் தொடர்பான கோப் குழுவின் அறிக்கை நேற்று (வியாழக்கிழமை) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்தக் குழுவின் தலைவர் பேராசிரியர் சரித ஹேரத் இதனைச் சமர்ப்பித்தார்.

இதேநேரம், புதிய விமானங்களை கொள்வனவு செய்வது தொடர்பாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு பதிலளித்த அவர், புதிய விமானங்களைக் கொள்வனவு செய்வதற்கான தனது முடிவை மூன்று மாதங்களுக்கு ஒத்திவைக்குமாறு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஹேரத் கூறினார்.

2022 – 2025 காலப்பகுதிக்கு 21 விமானங்களை குத்தகைக்கு எடுப்பதற்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் டெண்டர் கோரும் பணியில் ஈடுபட்டுள்ளதாக ஏப்ரல் 25 ஆம் திகதி நடைபெற்ற கோப் குழு கூட்டத்தில் தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, கோப் தலைவர், சுற்றுலா அமைச்சகம் மற்றும் மாநில விமான போக்குவரத்து மற்றும் ஏற்றுமதி மண்டல மேம்பாட்டு அமைச்சகத்தின் செயலாளர்களுக்கு, தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் முழு செயல்முறையையும் மறுபரிசீலனை செய்யவும், சம்பந்தப்பட்ட கொள்முதல் செயல்முறை முறையான முறையில் உள்ளதா என்பதைக் கண்டறியவும் அறிவுறுத்தியதாக அவர் கூறினார்.

# குடிவரவு – குடியகல்வுத் திணைக்களத்தின் தலைமை, கிளை வளாகங்களில் ஆர்ப்பாட்டம்

வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக கடவுச்சீட்டு விநியோகிக்கும் சேவை இவ்வாரத்திற்குள் இரண்டாவது தடவையாகவும் நேற்றும் இடைநிறுத்தப்பட்டது.

இவ்வாறு குடிவரவு – குடியகல்வு திணைக்களத்தின் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திலும், ஏனைய கிளை அலுவலகங்களிலும் கடவுச்சீட்டுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா என அறிவிக்கப்பட்டதையடுத்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர்.

கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்தில் கடந்த சில மாதங்களாகவே கடவுச்சீட்டினைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கும் நிலைமை காணப்படுகிறது.

இந்நிலையில் வழமைக்கு மாறாக அதிகளவான சேவையின் காரணமாக கணனி தொகுதிகளில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நேற்றைய தினம் கணனி தொகுதி பராமரிப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் காரணமாக நேற்று ஒரு நாள் கடவுச்சீட்டு சேவைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பதோடு , ஏனைய சேவைகள் நண்பகல் 12.30 மணியுடன் நிறுத்தப்பட்டன.

இந்த அறிவிப்பையடுத்து அதிகாலை முதல் கடவுச்சீட்டைப் பெறுவதற்காக நீண்ட வரிசைகளில் காத்திருந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடத் தொடங்கினர்.

குடிவரவு – குடியகல்வு திணைக்கள வளாகத்திலுள்ள பிரதான வீதியில் ஒன்றுதிரண்ட மக்கள் அந்த வீதியை மறித்து 'எமக்கு கடவுச்சீட்டு வேண்டும்' என்று கோஷமெழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முதல் நாள் இரவிலிருந்தும், அதிகாலையிலிருந்தும் வரிசையில் காத்திருந்த மக்கள் இது தொடர்பில் தமக்கு முன்னரே அறிவிக்கப்படவில்லை என்றும் விசனம் வெளியிட்டனர்.



எவ்வாறிருப்பினும் வழமைக்கு மாறாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட அதிக சேவை காரணமாகவே கணனித் தொகுதிகள் கோளாறடைந்தன எனவும், தொழிநுட்ப அதிகாரிகள் அதனை சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் எனவும் குடிவரவு – குடியகழ்வு திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அதற்கமைய திங்கட்கிழமை முதல் கடவுச்சீட்டு உள்ளிட்ட ஏனைய சேவைகள் வழமைக்கு திரும்பும் என எதிர்பார்க்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேபோன்று கண்டியில் அமைந்துள்ள குடிவரவு –குடியகல்வு திணைக்கள கிளை அலுவலக வளாகத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் காரணமாக அங்கு அமைதியற்ற நிலைமை ஏற்பட்டது.

தலைமை அலுவலகத்தின் அறிவிப்பையடுத்து குறித்த கிளை அலுவலகத்தை மூடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தனர். இதனால் கோபமடைந்த மக்கள், நுழைவாயிலை திறந்து உட்செல்லவும் முற்பட்டனர்.

எனினும் அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த ஊழியர்களால் அவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இதேவேளை மாத்தறையிலுள்ள கிளை அலுவலகத்துக்கு அருகிலும் இவ்வாறு மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

## பப்ஜி விளையாடுவதில் மூழ்கியிருந்த குடும்பத்தலைவர் பரிதாபமாகச் சாவு

கைத்தொலைபேசியில் பப்ஜி விளையாட்டில் மூழ்கிப் போயிருந்த குடும்பத் தலைவர், தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாவடியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 28 வயதுடைய குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரை மாய்த்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 2 வாரங்களுக்குள் இரண்டாவது நபர் கைத் தொலைபேசியில் இணையவழி போர் விளையாட்டில் ஈடுபட்டு உயிரை மாய்த்துள்ளனர்.

புதன் இரவு படம் பார்த்துவிட்டு தூக்கத்துக்குச்சென்றோம். காலையில் எழுந்து பார்த்தபோது, கணவர் தூக்கிலிட்டு சடலமாக காணப்பட்டார்.

எப்போதும் பப்ஜி விளையாடுவதில் ஆர்வமாக இருப்பார். வேறு பிரச்சினைகள் அவருக்கு இருக்கவில்லை என்று மனைவி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை முன்னெடுத்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப் பட்டது.

கடந்த மாத இறுதியில் இளவாலையைச் சேர்ந்த இளைஞன் இதேபோன்ற காரணத்தினால் உயிரை மாய்த்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## முழு கடையடைப்பு நடத்த வவுனியாவிலும் ஏற்பாடு!

இலங்கை முழுவதும் நடத்தப்படவுள்ள கடையடைப்பு போராட்டத்துக்கு வவுனியாவிலும் ஆதரவு தெரிவித்து கடையடைப்பு நடத்தவுள்ளதாக ஆசிரியர் சேவா சங்கத்தின் தலைவர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று(வியாழக்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

இன்று நாடுபூராகவும் பூரண ஹர்த்தாலை அனுஷ்டிப்பதற்கு நாட்டில் உள்ள அனைத்து அரச, அரச சார்பற்ற தனியார் தொழிற்சங்கங்களும் தீர்மானித்துள்ளன.

நாடு பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட நிலையில் மக்கள் தங்களது வாழ்வைக் கொண்டு நடத்த கஷ்டப்படும் நிலையில் அரசாங்கம் காத்திரமான நடவடிக்கை எடுத்து இந்த பிரச்சினைக்கு திர்வை காண்பதை விடுத்து இந்தப் பிரச்சினையை மேலும் விரிவடையச்செய்து மக்களை துன்புறுத்தக்கூடிய நிலையை தோற்றுவித்துள்ளது. எனவே இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாது. – எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## அலிசப்ரி ரஹீமின் காரில் மோதுண்டு ஒருவர் சாவு!

நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்றி ரஹீமின் காரில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பாலாவி – கற்பிட்டி பிரதான வீதியில் புதன்கிழமை இரவு இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் புத்தளம் பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

விபத்து இடம்பெற்ற போது, நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்றி ரஹீமும் குறித்த காரில் பயணித்துள்ளமை பொலிஸாரின் முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தநிலையில், விபத்து தொடர்பில் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் எனவும், கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் தொடர்ச்சியாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் குறிப்பிடப்படுகின்றது.

## காலி முகத்திடல் போராட்டத்துக்கும் தமிழர் போராட்டத்துக்கும் வித்தியாசம்!

### கதிர் எடுத்துரைப்பு

தற்போதைய மக்களின் போராட்டம் உணவுக்கான போராட்டம், தமிழர்களின் போராட்டம் உரிமைக்கான போராட்டம் எனவே இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு என ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடகப் பேச்சாளர் இ.கதிர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நிகழ்த்தப்பட்டதற்கான சாட்சியங்களாக அந்த மண்ணில் படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவுகூர்ந்து வருகின்றோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலையில் இந்த நிகழ்வை எவ்வாறு நினைகூர்வது. தொடர்ந்தும் அரசின் அடக்கு முறைக்கு அஞ்சி கடைப்பிடிப்பதா? மாறாக நாங்கள் எழுச்சிகொண்ட மக்களாக நினைவுகூருவதா?

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை சாதாரண விடயமல்ல. இந்த நாளை அனைவரும் ஒன்று திரண்டு தேசிய எழுச்சி நாளாகப் பிரகடனப்படுத்தி நினைவுகூரவேண்டும் என்று அரசியல் கட்சி சார்ந்தவர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

மக்களின் கொள்கைக்கு மாறாக ஒவ்வொரு அரசியல் கட்சி பிரமுகர்களும் கட்சி கொள்கைகளை இங்கு வந்து பிரகடனப்படுத்துவதும் நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதையும் நாங்கள் காண்கின்றோம்.

மக்கள் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து தேசியத்தின் பெரும் சக்தியாக இந்த நாளை நாங்கள் நினைவுகூர வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் மக்கள் எழுச்சி போராட்டம் பெரிய அளவில் நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் தமிழர்களின் உரிமைபோராட்டத்தின் பால் மரணித்த மக்களின் நினைவேந்தல் என்பது ஒரு தேசிய எழுச்சி போராட்டமாக மாற்றம் பெறவேண்டும்.

பல வலிகளை சுமந்து போராடிய எமது இனம் இன்று சாதாரண நிலைமைக்குள் அரசியல்வாதிகளால் கொண்டு செல்லப்படுவதை நாங்கள் பார்க்கின்றோம். தென்னிலங்கையில் சிங்கள மக்கள் முன்னெடுத்து வரும் மக்கள் போராட்டம் அது ஓர் உணவுக்கான போராட்டம், எங்கள் போராட்டம் வயிற்றுப் பசியினையும் பார்க்காது அதனையும் தாண்டி உரிமைபசிக்கான போராட்டம். இரண்டு போராட்டத்துக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன.– எனக் குறிப்பிட்டுள்ளார்.

# அனைவரும் ஏற்கும் அரசமைப்பு நாட்டில் உருவாக்கப்படவேண்டும்

## அன்ரனி ஜேசுதாசன் கோரிக்கை



காலிமுகத்திடலில் தற்போதைய அரசாங்கத்தை வீட்டுக்குச் செல்லுமாறு கூறி முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்திற்கு தனது ஆதரவை வழங்குவதாக தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண கடற்தொழிலாளர் இணையமும், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் ஒன்றிணைந்து நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

தற்போது நாட்டில் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு வடக்கு மாகாண கடற்தொழிலாளர் இணையம் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது.

அத்தோடு வடபகுதியில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுடைய உரிமைகளுக்காக வடக்கு மாகாண கடற்தொழிலாளர் இணையம் தொடர்ச்சியாக குரல் கொடுக்கும்.

வடக்கு கிழக்குப் பகுதிகளில் அரசு திட்டமிட்ட வகையில் காணி சுவீகரிப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது அதனை தடுத்து நிறுத்த வேண்டும்.

தற்பொழுது எரிபொருள் விலையேற்றத்தின் காரணமாக மீனவர்கள் கடும் பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றார்கள் எனவே அதற்குத் தகுந்த தீர்வைப் பெற்றுத் தர வேண்டும். தமிழ்நாட்டு அரசாங்கம் இந்திய இழுவை மடி தொழிலாளர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழையாமல் இருப்பதற்கான ஒரு நாடாளுமன்றத் தீர்மானத்தைத் தமிழ் நாட்டு நாடாளுமன்றத்தில் எடுக்க வேண்டும்.

தற்போது நாடு பூராகவும் இளைஞர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் வெற்றி பெற்று ஒரு ஆட்சி மாற்றம் ஏற்பட்டால் தற்பொழுது அரசாங்கத்தில் நாடாளுமன்றத்தில் உள்ளோர் யாரும் மீண்டும் அமையவுள்ள அரசாங்கத்தினுள் உள்வாங்கப்படக் கூடாது. புத்திஜீவிகள் மற்றும் சமூக நலன் சார்ந்தோர் மாத்திரம் எதிர்வரும் அரசில் உள்வாங்கப்பட வேண்டும்.

அத்தோடு எல்லா இனங்களாலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சகல மத அடையாளத்தையும் பாது காக்கக் கூடிய ஓர் அரசியல் யாப்பு உருவாக்கப்பட வேண்டும். எனவே பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய அன்றாடம் தொழிலுக்குச் சென்று உழைக்கும் மக்கள் கடும் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள் அவ்வாறான மக்களுக்கான ஒரு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.– எனத் தெரிவித்துள்ளார்.

# எரிபொருளுக்கான வெளிப்படை விலைச் சூத்திரம் அடுத்தவாரம்!

## எரிசக்தி அமைச்சு தகவல்

எரிபொருளுக்கான வெளிப்படையான விலைச் சூத்திரத்தை அடுத்த வாரம் அமைச்சரவைக்கு அறிமுகப்படுத்தவுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று (வியாழக்கிழமை) நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்படுவது இலாபம் ஈட்டுவதற்காக அல்ல என்றும் நட்டத்தைக் குறைப்பதற்காகவே என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பெரும்பாலான எரிபொருளை ரயிலில் கொண்டு செல்லும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும், தற்போது இலங்கையில் போதியளவு பெற்றோல் இருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மூன்று நாள்களில் பெற்றோல் நிலைமையை வழமைக்கு கொண்டுவர முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# நல்லாட்சியின் கொள்கையை நடைமுறைப்படுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள கோட்டாபயவின் ஆட்சி!

இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர 2020 இற்கு முந்தைய வரி விதிப்பை நடைமுறைப்படுத்த வாய்ப்பிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைய வரிக் கட்டமைப்பு நிலையானது அல்ல என்று மத்திய வங்கியின் ஆளுநரும் அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு சென்றுள்ளார்.

எனவே 2020 ஆம் ஆண்டுக்கு முன்னதாக நடைமுறையில் இருந்த வரிக் கட்டமைப்பை மீண்டும் நடைமுறைப்படுத்தவேண்டும் என்று அவர் யோசனை தெரிவித்துள்ளார்.

இலங்கை, தற்போதைய பொருளாதாரத்தை மீண்டும் சீரான பாதையில் கொண்டு வருவதற்கு சில கடினமான தெரிவுகளைச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

இதன்படி குறைந்தபட்சம் 2019 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட பெரும் வரிக் குறைப்புகளுக்கு முன்னர் இருந்த வரிகளை மீண்டும் அறிமுகப்படுத்த அதிகாரிகள் எதிர்பார்க்கிறார்கள்,

இலங்கையின் பொருளாதாரத்தை மீள் எழுச்சி பெறுவதற்காக 2016 ஆம் ஆண்டு ஜுன் மாதம் அப்போதைய நல்லாட்சி அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கையை மேற்கொண்டது. ஆனால் 2019 நவம்பரில் ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷ நிர்வாகம், வருவாயை அடிப்படையாகக் கொண்ட மூன்றாண்டு பொருளாதார ஸ்திரப்படுத்தல் திட்டத்தை முன்கூட்டியே நிறுத்தி வைத்தது.

இலங்கையின் உத்தியோகபூர்வ பணவீக்கச் சுட்டெண் கடந்த ஏப்ரலில் ஏறக்குறைய 30 வீதத்தால் அதிகரித்தது.

அத்துடன் மார்ச் 7 ஆம் திகதியன்று, நாணய மிதப்பு அறிமுகப்படுத்தப்பட்டமையை அடுத்து, நாளாந்த அத்தியாவசியப் பொருள்களின் விலை மீண்டும்; அதிகரித்ததன் காரணமாக நாடு மிகை பணவீக்கத்துக்கு தள்ளப்பட்டது.

# காணாமல் ஆக்கப்பட்ட உறவை தேடி மரணமடைந்த தாய்க்கு அஞ்சலிகள்





காணாமல் ஆக்கப்பட்ட தனது உறவுகளைத்தேடி மரணமடைந்த தாய்க்கு வவுனியாவில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்ட தனது மகன், மருமகன், பேரன் ஆகிய மூவரைத் தேடிவந்த தாய் ஒருவர் சுகவீனம் காரணமாக அண்மையில் மரணமடைந்தார். வவுனியா – கிறிஸ்தவகுளம் பகுதியைச் சேர்ந்த செல்லையா செல்வராணி (வயது 75) என்ற தாயே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

அவருக்கு வவுனியாவில் தொடர்ச்சியாகப் போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நேற்றுமுன்தினம் (புதன் கிழமை) அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது அவரது படத்துக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

இந்தப் பின்னணிகள் இருந்தும், நல்லாட்சி வந்தது. ஆனால் இந்த ஊழல்கள் எல்லாம் பாராமுகமாகவே போர்த்து மூடப்பட்டன. ஏனெனில் மற்ற அரசியல்வாதிகளும் அப்படியே ஊழல்களில் ஊறியவர்கள். ஆகவே, சுரண்டல்களில் ஒரு புரிந்துணர்வு இருந்தது.

இவர்கள் விட்டுக் கொடுத்து இவர்களால் உருவாகும் அரசு வந்தால், இந்தக் கணக்கு வழக்குகளைப் பற்றி கவலைப்படாமல், ஒத்து ஊதிக் கொண்டு வாழ்ந்து விடுவார்கள்.

ஆனால் காலிமுகத்திடலில் எழுந்தி



ஸ்ரீமா

ருக்கும் போராட்டமோ, அதை நடத்துபவர்களின் கோரிக்கைகளோ வித்தியாசமானவை. இப்படியான ஊழல் அரசியல்வாதிகளை ஒரேயடியாக வெளியேற்ற வேண்டும், நாட்டை யாரிடம ஆட்சிக்குக் கொடுக்க வேண்டும், எப்படியான முறையில் ஆட்சி சரியாகக் கொண்டு செல்லப்பட வேண்டும் என்பனவும், இவர்கள் போன்றவர்கள் நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பனவும் அவற்றில் அடங்கும். அவர்கள் நீதியைச் சரிப்படுத்தக் கூடியவர்களாக ராஜபக்ஷக்களுக்கு தெரிகிறது.

ஆதலால் அவர்கள் நீதியை எப்படியும் நிலைநாட்ட விரும்பும் அரசியல் கட்சிகளிடம்தங்களது அதிகாரங்களைக் கொடுத்து விட்டு வெளியேறி, தங்களின் கைகளில் விலங்குகளும் தலைகளில் மண்ணையும் போட விரும்பவில்லை.

இது உள்ளூர் நடப்பானால், சர்வதேசத்திலோ மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள் என மனித உரிமை மீறல் குற்றங்கள் சுமத்தப்பட்டு விசாரணைகளுக்குக் கோடி காட்டப்படுகிறது.

இவர்கள் அதிகாரங்கள் இல்லாது பதவியை இழந்தால், இந்த சர்வதேசப் பிரச்சினைகளை சமாளிப்பது எப்படி என்ற பெரும் தொல்லை. ஆகவே, அவர்கள் இந்தப் போராட்டங்களுக்கு மனநீதியாக மதிப்பளித்து தங்களது அதிகாரங்களைத் துறந்து செல்வார்கள் என்பது யதார்த்தமல்ல. இவற்றை அடக்க முயன்ற ஓர் எத்தனம்தான் ரம்புக்கன சம்பவம். அதன் தாக்கம் சிங்கள மக்களையே பாதித்ததால் இப்பொழுது அதன் தாக்கத்தை நீர்த்துப் போகச் செய்யும் கைங்காரியங்களே நடக்கின்றன.


### ரம்புக்கனயில் நடந்தது என்ன?

நிராயுதபாணிகளாக எதிர்ப்புத் தெரிவிக்கும் பொதுமக்கள் கூட்டம், அதனைக் கலைந்து போகச் செய்வதற்கு எச்சரிக்கை வேட்டுக்கள் ஆகாயத்தில் தீர்க்கப்பட்டனவா என்பது சர்ச்சைக்குள்ளாகிறது. கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சோ, தண்ணீரைப் பீய்ச்சி அடித்தலோ நடக்கவில்லை. றப்பர் வேட்டுகள் பாவிக்கப்படவில்லை. மக்கள் கூட்டத்துக்குள் நேரடியாக துப்பாக்கி ரவைகள் பாவிக்கப்பட்டு பின் பலர் படுகாயப்படுத்தப்பட, ஒருவர் உயிரிழந்தார். வன்முறையில் ஈடுபட்ட கும்பலை அடக்கத்தான் இது நடந்தது என்று 'பயங்கரவாதக் கதையே முதலில் அவிழ்க்கப்பட்டது. என்றாலும் பின்னர் வந்த தகவல்களில் அதிகார வர்க்கம், இது கட்டுமீறி நடந்ததாகவும், மனம் வருந்துவதாகவும் தெரிவித்தது. பரபரப்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு மரண விசாரணை அறிக்கைகள், சம்பவம் நடந்த இடங்களைப் பார்வையிடல் என்பவையெல்லாம் இரவு பகலாக நடந்து, மேலதிக விசாரணை அறிக்கைகள் நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் கடமையில் இருந்து நிறுத்தப்பட்டார்கள். தற்பொழுது அந்த அறிக்கையின் அடிப்படையில் நீதிபதி சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களைக் கைது செய்ய உத்தரவிட்டுள்ளார். கைதுகளும் நடந்துள்ளன. அப்படியான உத்தரவுகளை நீதிமன்றம் மேற்கொள்ள அதிகாரங்கள் உண்டா, இது உணர்ச்சியில் செய்யப்பட்டதா என்றும் சர்ச்சைகள் எழுப்பப்படுகின்றன.

சிங்கள மக்கள் தாங்கள் வளர்த்த சிங்களப் பேரினவாதம் என்ற கடா தங்களது மார்பிலே பாய்ந்ததை உணர்ந்து சீறியமையால் இந்தச் சுறுசுறுப்பு நடவடிக்கைகள்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் ஜூலை 1977 இல் தொடங்கிய இப்படியான பொலிஸ், இராணுவப் படைகளின் அட்டகாசங்கள், பேரினவாதத்தின் பிரதிபலிப்பாக முள்ளிவாய்க்காலில் முடிந்தன.

இந்த எழுச்சிகளில் இருந்து தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டியவை என்ன? சாதிக்க வேண்டிய சாணக்கியங்கள் என்ன?



ஜே.ஆர்.

* * *

### யாழ்ப்பாணம்



அமிர்தலிங்கம்

45 ஆண்டுகளுக்கும் முன்னான சம்பவங்கள் இவை. இப்பொழுது ஊடகவியலாளர்களாக ஆக்கங்கள் செய்பவர்கள், கருத்தரங்குகளில் பங்கு பெறுவோர் பள்ளிக்கூடத்திலோ அரசியலிலோ எதுவும் முகர்ந்து பார்க்காத இளைஞர்களாக இருந்திருக்கலாம்.

பிரித்தானிய காலனித்துவ அரசு உருவாக்கிய பொலிஸ், இராணுவப் பிரிவுகளையும் சுதந்திரத்தின் பின் சிங்கள அரசுகள் பொறுப்பேற்றுக் கொண்டன. இவை இரண்டுமே முக்கியமாக மக்களின் பாதுகாப்புக்காகவும் அவர்களின் உரிமைகளுக்கு அனுசரணையாக இயங்குவதற்காகவும் அமைக்கப்பட்டவை. நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருந்தால் படைகளின் பங்கு கணிசமாகும்.

ஆனால் பண்டாரநாயக்காவின் காலம்தொட்டு அவற்றைத் தங்களது பேரினவாத அரசியல் சித்தாந்தங்களையும் அதிகாரத்திலிருக்கும் அரசியல்வாதிகளையும் பாதுகாப்பதற்காக சிங்களப் பேரினவாதம் பயன்படுத்தியது. பேரினவாதம் அந்தக் கட்டுமானங்களில் புகுத்தப்பட்டு, ஒரு நாடு என்ற சிங்கள அதிகாரத்திற்குத் தமிழ் மக்கள் எதிரானவர்கள் என்றும், அவர்களுக்கு இந்தியாவின் ஆதரவு உண்டு என்பதால் அவர்கள் ஓரங்கட்டப்பட்டு அடக்கி ஆளப்பட வேண்டும் என்றும் பேரினவாத உணர்வுகள் ஊட்டப்பட்டன. ஸ்ரீமாவின் ஆட்சிக்காலத்தில் பொலிஸும் இராணுவமும் பெரும்பான்மை சிங்கள மயமாக்கப்பட்டு, அவரின் உறவினர் ரத்வத்தை அவற்றை மேற்பார்வை செய்தார்.

சிங்களம் மட்டும் சட்டத்தின் தீவிர அமுலாக்கம் தமிழ் மக்களும், அவர்கள் செறிந்து வாழும் பகுதிகளும் ஓரங்கட்டப்பட்டு அவர்களது தனித்துவத்துக்கான குரல் இந்தக் காலகட்டத்தில் ஓங்கியது.

தேர்தல் காலத்தில் வாக்குகள் பெற்று அதிகாரத்துக்கு வர வேண்டும் என திட்டமிட்ட ஜே.ஆர்., தமிழ் மக்களது நியாயமான கோரிக்கைகளுக்குத் தீர்வு தரப்படும் என அரசியல் விஞ்ஞாபனத்தில் அறைகூவல்விடுத்துவென்றுபதவியேற்றார். தமிழர் விடுதலைக் கூட்டணியும் இறைமையுள்ள சுதந்திர தமிழீழம் அமைப்பதற்கான அதிகாரம் பெற்று கிடைத்த ஆசனங்களின் எண்ணிக்கையால் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார்.

காலிமுகத்திடலில் தொடங்கிய தமிழர் உரிமைப் போராட்டம் வன்முறையால் விரட்டப்பட்டது. அதே காலிமுகத்திடலில் சிங்கள மக்களது போராட்டம் இப்போது தொடங்கியுள்ளது. இதுவும் அதிகாரத் தரப்பிடம் இருந்து வன்முறையைச் சந்திக்குமா என்பது இனி வரும் நாள்களில் தான் தெரிய வரும்.

அதிகாரத்தைக் கைவிட யாரும் விரும்பியவர்கள் அல்லர். அதேபோலத் தான் ஸ்ரீமாவின் ஆட்சிக்காலத்தில் கோலோச்சிய பெரும்பான்மை வாதிகள் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, என். க்யூ.டயஸ், ரத்வத்தை போன்றோர் வளர்த்த பொலிஸும் இராணுவமும் அதிகாரத்தைக் கையளிக்க விரும்பவில்லை.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் வெற்றி சிங்களத்துக்கு வெறி ஊட்டியது. அவர்கள் தங்களது பக்கத்துக்கு ஆதரவாக இல்லை, ஜே.ஆரைப் பதவிக்குக் கொண்டுவந்தார்கள் என்ற கசப்புணர்வு. அதேபோல இன்று, எவர் பதவிக்கு வர ஆதரவு தருவது என்ற நிலைமை கூட்ட



பண்டா

மைப்புக்கு. அனுபவங்களால் நிதானித்துச் சாணக்கியமாகச் செயல்பட வேண்டிய காலம்.

தங்களுக்குவிருப்புக்குஅடிபணியாத யாழ்ப்பாணத்தை நிர்மூலமாக்கத் திட்டமிட்டது பொலிஸ். தேர்தல் முடிவுகள் வந்து முடிந்து கொண்டிருந்த அதிகாலையில் யாழ்ப்பாணப் பகுதியில் பஸ் நிலையத்தில் முடிவுகளைப் பற்றி பேசிக் கொண்டிருந்த மக்களைத் தாக்க தொடங்கியது. அது தொடர்ந்து பெரும் கடைப் பகுதியின் வியாபார நிலையங்களுக்கு தீ மூட்டுவதில் படர்ந்து, பார்வையிடச் சென்ற அமிர்தலிங்கம் தாக்கப்படுவதற்கு வளர்ந்தது. இதனால் பொதுமக்கள் நிராயுதபாணிகளாக எதிர்ப்புத் தெரிவித்து கஸ்தூரியார் வீதி வழியாக ஸ்ரான்லி வீதியை வந்தடைந்தபோது ஆயுதம் தாங்கிய பொலிஸார் வரவழைக்கப்பட்டனர். சரமாரியாக மக்கள் மீது வேட்டுகள் தீர்க்கப்பட்டன – இப்போது ரம்புக்கனயில் தீர்க்கப்பட்ட மாதிரி. அதன் பின்னர் நடந்தது என்ன? நாளை பார்ப்போம்.

# ‘சம்மன்’ இல்லாமல் ஆஜர்!

## அக்கரை / அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

ராஜபக்ஷ அரசை விட்டு நீங்குவதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்தது தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சிரேஷ்ட உறுப்பினர் சுமந்திரன் கூறிய கருத்துக்கள் விதண்டாவாதமாகத்தான் தோன்றின. வேண்டாத வாதமாகவும் தோன்றியது. அதிலும் குறிப்பாக, தொழிலாளர் காங்கிரஸைச் சார்ந்த செந்தில் தொண்டமானிடம் உடனடியாக, சூடாக வாங்கி கட்டிக் கொண்ட பிறகு, ஏன், இல்லாத ஒரு பிரச்சினையை



ஊதிக் கெடுத்தார் என்று கூடத் தோன்றுகிறது.

முதலில், நாட்டில் இத்தனை அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரசினைகள் இருக்கும் போது, சுமந்திரன் போன்ற முன்னணித் தலைவர், உப்புசப்பு இல்லாத இந்த விடயம் குறித்துக் கருத்து கூற வேண்டிய அவசியமே இருக்கவில்லை. அதிலும், தானாகவே முன் வந்து தனது கருத்தைப் பதிவிட வேண்டிய கட்டாயமும் இருக்கவில்லை. அவர், தொழிலாளர் காங்கிரஸ் குறித்து முன் வைத்த கருத்துக்கள் நகைப்பிற்குரியவை.

சுமந்திரனின் முக்கிய குற்றச்சாட்டுகள் இரண்டு. முதலாவது, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அரசு கவிழும் என்று தெரிந்த பின்னரே, தொழிலாளர் காங்கிரஸ் அரசிற்கான ஆதரவை விலக்கிக் கொண்டது. இரண்டாவது, இனப்போரில் இழந்த தமிழ் உயிர்கள் குறித்து தொழிலாளர் காங்கிரஸ் என்றுமே கவலைப்பட்டது கிடையாது.

### குடியுரிமை ரத்து

இதில் முதல் குற்றச்சாட்டிற்கு ஏதாவது சல்ஜாப்பு நியாயத்தைக் கூறலாம். ஆனால், இரண்டாவது முற்றிலும் ஏற்றுக் கொள்ள முடியாத விடயம். காரணம், மலையக தமிழர்களை என்றுமே இரண்டாவது, மூன்றாவது தட்டில் வைத்துத்தான் யாழ்ப்பாணத் தமிழர்கள் கருதி, நடத்தி வந்திருக்கிறார்கள். அந்த வகையில், இலங்கைத் தமிழர்களின் அரசியல் தலைமைகள் தான், மலையகத் தமிழர் தரப்பை புறக்கணித்தும், ஒதுக்கியும் வைத்து வந்துள்ளன.

இதில் வேண்டுமென்றால், விடுதலை புலிகள் காலம் துவங்கி சில மலையகத் தமிழர் அரசியல் தரப்புகள் யாழ்ப்பாண ஆதரவு நிலைப்பாட்டை எடுத்து வந்தன என்று கூறலாம். விடுதலைப் புலிகளின் பயிற்சித் தளங்கள் கூட மலையகத்தில் நிறுவுவதற்கு சில மலையகத் தமிழ்த் தலைவர்கள் உதவி வந்தார்கள் என்று செய்திகள் கசிந்து வந்தன. அவை எவையுமே நிரூபிக்கப்படவில்லை.

அது போன்றே, இனப்போர் முடிந்த காலகட்டம் துவங்கி, யாழ்ப்பாணத் தரப்புகளுக்கும் மலையகத் தமிழர் அரசியல் தலைமைகள் சிலவற்றிற்கும் அரசியல் தொடர்பு சிறிது நெருக்கமானது எனலாம். குறிப்பாக, ராஜபக்ஷ எதிர்ப்பு அரசியலில், தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் மலையக தமிழர் தலைவரான மனோ கணேசன் போன்றோர், பல விடயங்களிலும் ஒன்றுபட்ட கருத்தைக் கொண்டிருந்தார்கள். அதற்காக, அவர்கள் ஒன்றுபட்டு செயல்பட்டார்கள் என்றல்ல பொருள்.

தேர்தல் அரசியல் ரீதியாக, மனோ கணேசன் போன்றோருக்கு, தென்னிலங்கையை சேர்ந்த ஐக்கிய தேசிய கட்சி, பின்னர் ஐக்கிய மக்கள் கட்சி போன்றோருடன் சேர்ந்து பணியாற்ற வேண்டிய கட்டாயம். மாறாக, தேர்தல் அரசியலில் தனித்தும், தேசிய அரசியலில் ராஜபக்ஷ எதிர் தென்னிலங்கை கட்சிகளுடன் சேர்ந்தும் அரசியல் செய்வது, கூட்டமைப்பு போன்ற இலங்கை தமிழர் கட்சிகளுக்கு கை வந்த கலை.

### பிரச்சினைகள் வேறு

நாடு சுதந்திரம் அடைந்த முதல் வருடமே, மலையக தமிழர்களின் குடியுரிமையை ஒட்டு மொத்தமாக ரத்து செய்து, அவர்களை நடுத் தெருவில் நிறுத்தியதற்கு அன்றைய இலங்கைத் தமிழர் தலைமை முட்டுக் கொடுத்தது. இது குறித்த சட்டத்திற்கு, நாடாளுமன்றத்தில், ஆளும் ஒன்று பட்ட ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியாளர்களை அன்று பிரபலமாக இருந்த இலங்கை தமிழ் காங்கிரஸ் முழுமையாக எதிர்க்கவில்லை.

இது குறித்து, இன்று வரை, யாழ்ப்பாணத் தமிழர் தரப்பு விளக்கம் அளித்தது இல்லை. மலையகத்தவரிடம் மன்னிப்பு கோரியதும் இல்லை. இந்தப் பிரச்சினை எப்போது பேசு பொருள் ஆனாலும், அதற்கான கூட்டமைப்பின் ஒரே விளக்கம் இதுதான். அன்று, தந்தை செல்வா, தமிழ் அரசு கட்சியை துவங்கி இருக்கவில்லை. அவ்வாறாயிருந்தால், இது போன்ற தென்னிலங்கை முன்னெடுப்புகளுக்கு இலங்கை தமிழர் தரப்பு ஆதரவு கொடுத்திருக்காது.

இது நியாயமான வாதமாக தோன்றலாம். ஆனால், பேச்சு, அன்றைய யாழ்ப்பாண அரசியல் குறித்ததே ஆகும். இல்லையென்றால், அது, அத்தைக்கு மீசை முளைத்தால் சித்தப்பா என்ற சித்தாந்தத்திற்குள் அடங்கி விடும். மற்றபடி, மலையகத் தமிழர் பிரச்சினையில், இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் எடுத்த முடிவை, அன்று அந்தக் கட்சியில் சிரேஷ்ட உறுப்பினராக இருந்த தந்தை செல்வா எதிர்த்தார் என்பது உண்மை.

அது போன்றே, தந்தை செல்வா தமிழரசு கட்சியை துவக்கிய காலகட்டத்தில், மலையக தமிழர் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானிடம் இணைந்து பணியாற்ற அழைப்பு விடுத்தார் என்பதும் உண்மை. அதனைத் தொண்டமான் புறந்தள்ளியமையும் வரலாறு.

தனது முடிவுக்கு மூத்த தொண்டமான் அளித்த விளக்கம் இன்றும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே. அன்றைய காலகட்டத்தில், வடக்கு – கிழக்கு சார்ந்த தமிழர் தரப்புகள்,



தங்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளுக்காகக் குரல் எழுப்பத் துவங்கி இருந்தனர். ஆனால் மலையகத்தினரோ, இல்லாமலே ஆக்கப்பட்டிருந்த தங்களது குடியுரிமை குறித்து கவலைப்பட்டுக் கொண்டிருந்தனர்.

பார்ப்பதற்கு ஒன்று போல தோன்றினாலும், இரண்டும் வேறு வேறு விதமான பிரச்சினைகள். உதாரணத்திற்கு, பிற்காலத்தில் தோன்றிய ‘சிங்களம் மட்டும்’ என்ற அரசின் அறிவித்தல், இலங்கை தமிழர் மட்டுமே சார்ந்த பிரச்சினை. அவர்களது கல்வி மற்றும் வேலை வாய்ப்பைப் பாதித்த விடயம். ஒரு வாய் சோற்றிற்கே வழியில்லாத மலையகப் பாமரர்களுக்கு அன்று அது முக்கியம் அல்ல. இல்லையென்றாலும், சிங்கள மொழியும் அவர்களுக்குப் பிரச்சினையாக இருக்கவில்லை. அதனை கற்றுக் கொள்வதை அவர்கள், தன்மானப் பிரச்சினையாகக் கருதவில்லை.

இந்தப் பின்னணியில், தந்தை செல்வாவின் செயல்களுக்கு நியாயம் கற்பிப்போர், அது போன்றே தற்போதைய தொழிலாளர் காங்கிரஸ் தலைமையின் நிலையையும் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும். தந்தை ஆறுமுகன் தொண்டமான் திடீரென்று இயற்கை எய்த காலத்தில், அதிக அரசியல் முன் அனுபவம் இல்லாத அவரது மகன் ஜீவன் தொண்டமான் கட்சித் தலைமையை ஏற்றுக் கொண்டார். இது அண்மைய வரலாறு.

சுமந்திரனின் கூற்று வேண்டுமென்றால், ஆறுமுகன் தொண்டமானுக்கு பொருந்தலாம். அதுவும் விவாதப் பொருளே. ஆனால், இளம் தலைவரான ஜீவன் தொண்டமானைத் திசை திருப்ப முயல்வதாகவே இது பார்க்கப்படும். காரணம், சில நாள்களுக்கு முன்னராகவே ஜீவன் தொண்டமான் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்யும் போது, கடந்த ஆண்டு சீனாவில் இருந்து இயற்கை உரம் இறக்குமதி செய்ததில் நேரிட்ட குழப்பத்தால், தங்களது மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டமையைச் சுட்டிக் காட்டினார். அதுவே உண்மையும் கூட.

இவற்றிற்கு அப்பால் சென்று, இரு பிரிவுத் தமிழர்களிடையேயும், சமூக – கலாசார ரீதியான இடைவெளியும் அன்றும் இருந்தது. இன்றும் இருக்கிறது. எதிர்காலத்திலும் தொடரலாம். தங்கள் மக்களையே, ஜாதி வாரியாகப் பிரித்துப் பார்த்து யாழ் தலைமைகள் செயல்பட்டு வருகின்றன. அது போன்றே தீவுத் தமிழர்கள், கிழக்குத் தமிழர்கள் ஆகியோரையும் இத்தகைய வரையறையில் வைத்தே அவாகள் பழகி வந்துள்ளார்கள்.

இந்தப் பின்னணியில், மலையகத் தமிழ் மக்களை ஒதுக்கி வைத்து அரசியல் செய்து வந்தது ஒன்றும் ஆச்சரியப்பட வேண்டிய விடயம். அல்ல. ஆனால், சுமந்திரனின் தற்போதைய நிலைப்பாட்டிற்கு, இத்தகைய புரையோடிப் போன எண்ணவோட்டங்கள் நிச்சயமாக காரணம் அல்ல. அதனை உறுதியாக நம்பலாம்.

### மக்கள் நலன் மட்டும்...

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியை சுமந்திரன் சாடிய அதே நாள் பின்னேரம், அந்த கட்சியை சார்ந்த செந்தில் தொண்டமான், அதே யாழ் நகரில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரும் பதிலுக்கு சுமந்திரனை ஒரு பிடி பிடித்தார். செந்தில், கட்சித் தலைவர் ஜீவன் தொண்டமானின் உறவினர். அவரை விட அரசியலில் சிறிது மூத்தவர். கட்சித் தலைவரும் கூட.

செந்திலின் கூற்றின் படி, தொழிலாளர் காங்கிரஸ், மலையக தமிழர்களின் நலன் ஒன்றை மட்டுமே மனதில் கொண்டு செயல்படும் கட்சி. அதாவது, நாட்டின் தலைமையின் தனிப்பட்ட விருப்பு – வெறுப்புகளுக்கு அப்பால் சென்று, அந்தக் காலகட்டத்தில் ஆட்சி செய்யும் தலைமையுடன் நின்றால் மட்டுமே தங்கள் மக்களுக்குத் தேவையான நலத்திட்டங்களை பெற்றுக் கொள்ள முடியும் என்று எண்ணிச் செயல்படும் கட்சி.

இதன் காரணமாகவே, முதலில் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக் காலத்தில் 20 வருடங்களும், பின்னர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியான 2005 முதல் தற்போது சுமார் 17 வருடங்களும் அவர்களுடைய தலைமையோடு கூட்டணி வைத்துக் கொண்டிருந்தது. இடைப்பட்ட 2015 – 19 காலகட்டத்தில், அவர்கள் அன்றைய ஆட்சியாளர்களுடன் இணைந்து கொள்ளவில்லை என்றால், அங்கு அவர்களுக்கு இடமில்லை என்று வந்த சிக்னல் மட்டுமே காரணமாகும் எனலாம்.

அந்த வகையில், சுமந்திரன் கூறியமை உண்மை என்பதை செந்தில் தொண்டமானும் மறைமுகமாக ஏற்றுக் கொண்டார் என்றுதான் அர்த்தம். இன்னும் சொல்லப் போனால், நாளை மீண்டும் மஹிந்ததான் தொடர்ந்து பிரதமராக பதவி வகிப்பார் என்று நாடாளுமன்றத்தில் உறுதி செய்யப்பட்டு விட்டால், மீண்டும் அவர் தலைமையுடன் இணைந்து செயல்பட தொழிலாளர் காங்கிரஸ் தயங்காது. அதற்காக வெட்கப்படவும் செய்யாது என்றும் கருதலாம். அல்லது, இதுதான் அந்தக் கட்சியின் வரலாறு. இதுவே நிறுவுநர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலம் தொட்டு, தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடாக இருந்து வந்திருக்கிறது. அண்மை காலம் வரை பிற மலையகத் தமிழர் சட்சியினரும், முஸ்லிம் கட்சியினரும் கூட இவ்வாறே செயல்பட்டு வந்துள்ளார்கள் என்பதும் உண்மை.

### குற்றச்சாட்டிற்குப் பதிலடி

தங்களது மக்களுக்கு தாங்கள் செய்து வந்துள்ள பணிகளைப் பட்டியலிட்ட செந்தில் தொண்டமான், இனப்போர் காலகட்டத்தில் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு குறித்த சுமந்திரனின் குற்றச்சாட்டிற்கும் பதிலடி கொடுத்து இருக்கிறார். அது தொழிலாளர் காங்கிரஸ் நிலைப்பாட்டிற்கு நியாயம் கற்பிப்பதாக அமையவில்லை. மாறாக, சுமந்திரன் சார்ந்த தமிழரசு கட்சியையே சாடியது.

செந்தில் எழுப்பிய கேள்வியும் அதன் மூலம் அவர் சுமந்திரனை சாடிய விடயமும் இதுதான். எப்போது யாழ் நூலகத்தை தீக்கிரையாக்கிய ஐக்கிய தேசிய கட்சியுடன் தமிழரசு கட்சி மற்றும் கூட்டமைப்பு சேர்ந்து அரசியல் செய்யத் துவங்கியதோ, அப்போதே, தொழிலாளர் காங்கிரஸ் போன்ற பிற கட்சிகளைக் கேள்வி கேட்கும் தார்மீக உரிமையை அவர்கள் இழந்து விட்டார்கள். யோசிக்க வேண்டிய விடயம்தான்.

சம்மன் (அழைப்பாணை) இல்லாமல், காசு பெறாத ஒரு விடயத்தில் ஆஜராகி, சுமந்திரன் அவசியமில்லாத அரசியல் சிக்கலில் மாட்டிக் கொண்டமை, சில கேள்விகளை எழுப்பி உள்ளது. முதலாவது, நாளொரு காலத்தில், தொழிலாளர் காங்கிரஸ் கட்சியுடன் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பே தமது கட்சிக்கு இல்லை என்று அவர் முடிவு செய்து விட்டாரா? அவ்வாறான சூழ்நிலை உருவானால், அப்போது அத்தகைய புரிந்துணர்தல் குறித்து, தமிழரசுக் கட்சியைப் போலவே அரசியல் பாரம்பரியம் உள்ள தொழிலாளர் காங்கிரஸ் தொண்டர்களின் மனநிலை என்னவாக இருக்கும்?

(11ஆம் பக்கம் பார்க்க...)

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

செவ்வழி நயனம்

# புறங்கூறல்

புறங்கூறலாவது, காணாதவிடத்திலே பிறரை இழந்து பேசுதல். பிறருடைய கல்வி, செல்வம் முதலியவைகளைக் காணும்பொழுது உண்டாகும் பொறாமையே புறங்கூறுதலுக்கு முக்கிய காரணம். ஆதலினால், புறங்கூறுதலாகிய மொழிக்குற்றத்தை அகற்ற வேண்டும். புறங்கூறுபவர் ஒரு தொழிலுமில்லாத வீணர் என்றும், பிறர் ஆக்கம் பெறாத மனத்தையுடைய புல்லியர் என்றும் அறிஞரால் இகழப்படுவர். அவர் தாம் எல்லோரோடும் பகையாக்குவார். அவர் பிறருடைய குற்றங்களை ஆராய்ந்து சொல்லுதலையே குணமாகவுடையவர். ஆதலாற் சுற்றத்தார், நண்பினர், அயலார் ஆகிய எல்லோரும் அவரை வெறுப்பர். அதனால், அவர் இம்மைமறுமை இன்பங்களை இழந்தவரேயாவர்.

நாம் ஒருவனுடைய சிறுபழி ஒன்றை அவனைக் காணாதவிடத்தே அஞ்சி நின்று சொல்வோமாயின், அவன் நம்முடைய பழிகள் பலவற்றை நமக்கெதிரில் அஞ்சாது நின்று நாம் மிக வருந்தும்படி சொல்லுவான். ஆதலால், உறவினர், நண்பர் முதலாயினோரிடத்தே குற்றங் காணப்படுமாயின், அவரைத் தனித்தவிடத்திலே கண்டு புத்திசொல்லித் திருத்துதலேயன்றிக், காணாதவிடத்திலே இகழ்ந்து பேசலாகாது. 'புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல் – அறங்கூறு மாக்கந் தரும்' என்றார் திருவள்ளுவநாயனார்.

காணாத இடத்திலே பிறரை இகழ்ந்து பேசியுங் கண்ட இடத்திலே அவருக்கு இனியவர் போல முகமலர்ச்சி காட்டி இனிய வார்த்தை பேசியும் உயிர் வாழ்தலிலும் இறந்துவிடுவது நல்லது. புறங்கூறுதற்காகப் பிறருடைய குற்றங்களை ஆராய்பவர், புறங்கூறலாகிய தங்கள் குற்றத்தைச் சிந்திப்பாராயின், புறங்கூறிப் பழிபாவங்களை அடைய மாட்டார்.

**(இந்து கலாசார திணைக்கள வெளியீட்டிலிருந்து...)**




**தனுராசனம்**

**(உச்சநிலையில் வில்லு போன்ற தோற்றம்)**

**செய்முறை**

படி 1. புஜங்காசனத்தில் ஆரம்ப நிலையில் கூறப்பட்டவாறு குப்புறப்படுக்கவும்.

படி 2. பின் இரு முழங்கால்களையும் மடித்து இடது கையால் இடது மேற்பாதத்தையும் வலக்கையால் வலது மேற்பாதத்தையும் கெட்டியாகப் பிடிக்கவும்.

படி 3. மூச்சை இழுத்தபடி கைகளால் கால்களை இழுத்து தலை, மார்பு, தொடை முதலியவற்றை உயர்த்தி 'வில்' போல் வளைக்கவும். வயிற்றுப்பகுதியில் உடலின் பாரமனைத்தும் இருக்க வேண்டும். இந்நிலையில் ஆழமாக சுவாசிக்கவும். பின்னர் உச்சநிலையில் முன் பின்னாக ஆடியும்,பின்னர் பக்கவாட்டில் ஆடியும் ஆரம்ப நிலைக்கு வரவும். ஆடும் போது வயிறு, நெஞ்சு ஆகிய பகுதிகள் நன்கு அழுத்தப்படல் வேண்டும். முன்புறம் வரும் போது மூச்சை வெளிவிட்ட படியும் பின்புறம் போகும் போது மூச்சை இழுத்தபடியும் ஆடவேண்டும். சுவாசத்தை வேகமாகச் சுவாசிக்க கூடாது.

**பலன்கள் :**

புஜங்காசனம், சலபாசனம் ஆகிய ஆசனங்களுக்கு கொடுக்கப்பட்ட பலன்கள் இதற்கும் பொருந்தும். வயிற்றுப் புறத்திலுள்ள ஊளைச்சதைகள் குறைந்து உடல் மெலிவடையும், உடல் பலமும் சுறுசுறுப்பும் இளமையும் அதிகரிக்கும். தொடைகள், வயிறு, மார்பு, கழுத்து, முதுகு, இடுப்பு முள்ளந்தண்டு ஆகிய உறுப்புக்கள் வலிமையடையும், உடலின் செயற்திறன் அதிகரிக்கும். நீரிழிவு, பித்தப்பை கல்,அஜீரணம் வாய்வு தொல்லைகள், மலச்சிக்கல், வயிற்று (குடல்)புண் மற்றும் வயிற்று வலி, பித்தப்பைக் கோளாறுகள் சீர்செயய்யப்படுகின்றன. பெண்களது மாதவிடாய்ப் பிரச்சினை குணமடைவதுடன் கர்ப்பப்பை, சூலகம், பலோப்பியன் குழாய்கள் ஆண்களது புரஸ்ரெட் சுரப்பி ஆகியவற்றின் செயற்றிறன் அதிகரிக்கும்.

**- ஸ்ரீ. நதிபரன் - (யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)**

# பக்தி - மொழியின் அழகியல்

சமுதாயத்தில் மிகுந்த செல்வாக்குப் பெறும் ஒன்று இலக்கியத்துள் இடம்பெறல் இயல்பு. இந்நிலையில் சமுதாயத்தினை ஆட்கொண்டிருந்த இறை வழிபாடு, இலக்கியத்துள் புகுந்து தனித்த சிறப்புடன் வளர்ச்சியடைந்தது. ஒன்றின்பால் கொள்ளும் ஆழ்ந்த பற்றினைப் பக்தி எனக் கொள்ளலாம். இறைவன் மீது கொண்ட நம்பிக்கையுணர்வும் அதன் வாயிலாகப் பிறக்கும் பற்றுணர்வும் உள்ளத்தினின்று சொற்களாக உருவெடுத்து இலக்கியமாக மலர்கின்றன.

சமயம் மொழியோடு அந்நியோந்நியமாகத் தொடர்புடையது. இதனைக்காட்ட சம்பந்தர் 'நற்றமிழ் வல்லன் ஞானசம்பந்தர்', 'பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழையும்' என்றும், அப்பர் சுவாமிகள் 'தமிழோடு இசை பாட மறந்தறியேன்' என்றும், மாணிக்கவாசகர் தமிழையும் சைவத்தையும் இணைத்து

'சிறைவான் புணா தில்லைச் சிற்றம்பலத்துள்ளும்
என் சிந்தையுள்ளும் உறைவான் கூடவாய்ந்த
உன் தமிழின் துறைவாய் நுழைத்தனையோ'

என்றும், தமிழை முன்னிலைப்படுத்தித் தமது கருத்தியலை வெளிப்படுத்தியிருப்பதனை நாம் இலக்கிய வரலாற்று மூலாதாரங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது.

தாய்மொழியின் பற்றுணர்வால் எக்காலத்திலும் எவ்விடத்திலும் ஈர்க்கப்படாத சமுதாயம் இருந்ததில்லை. எனவே தாய்மொழிப் பற்றுணர்வினையே கருவியாகக்கொண்டு பல்லவர் காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் மக்களைத் தம்வசப்படுத்தியிருந்தனர்.

**- சி. குருபரநாத் -**
**(அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்)**

# அருகிவரும் ஆசீர்வாதம்



**ஆன்றோர் எமக்களித்த**
**அரியநல் ஒழுக்கமாம்**
**அற்புதமான விழுமியமாம்**
**தமிழர் பண்பாட்டில்**
**சிறியோர் முதல் பெரியோர் வரை**
**சிறப்பு மிக்க நன்னாளில்**
**கரம் குவித்து சிரம் தாழ்த்தி**
**பாதமதில் பணிவன்புடன்**
**பக்குவமாய் வணங்கி**
**வாய் நிறைந்த வாழ்த்துக்களை**
**வாங்கிவிடும் ஆசீர்வாதம்**
**வழக்கொழிந்து அருகி அருகி**
**வருவதும் ஏன் தானோ?**


**கூட்டுக் குடும்பமாய்**
**கூடிக்குலாவி வாழ்ந்து**
**உற்றமும் சுற்றமும் உரிமையுடன் உறவாடி**
**உன்னதமாய் வாழ்ந்த காலம்**
**உருக்குலைந்து போனதுடன்**
**நவீனம், நாகரீகம்**
**இயந்திரம், தொழில்நுட்பம்,**
**தகவல் தொடர்பாடல் என**
**உலகமே உள்ளங்கையில்**
**உருகி சுருங்கி விட**
**நவீன தலைமுறை**
**நையப்புடைத்து விட**
**ஆசீர்வாதமது அருகியே போனதோ?**

**சிறுசிறு சடங்கிற்கும்**
**சிறுசிறு சம்பிரதாயத்திற்கும்**
**அர்த்தம் பல உட்பொதிந்து**
**ஆன்றோர் பின்பற்றிவர**
**சமயம், சாத்திரம்**
**சம்பிரதாயம் எல்லாம்**
**மூட நம்பிக்கை, போலியென**
**நிராகரித்த காரணத்தால்**
**ஆசீர்வாதமது அருகியே போனதோ?**

**கற்றோர், கல்லாதோர் என்ற பேதமின்றி**
**அன்று அனைவருமே அணுகிநின்ற**
**இப்பண்பாட்டு விழுமியத்தை**
**பதவிகள் பல ஏற்று**
**அந்தஸ்து, கௌரவம் என**
**ஆடம்பர வாழ்வில் திளைத்தவர்**
**யார் காலை யார் தொடவென்ற**
**குறுகிய மனப்பாங்கை வளர்க்க**
**ஆசீர்வாதமது அருகியே போனதோ?**

**உணர்வுடன் கலந்துநின்ற**
**உயரிய பழக்கமிது**
**நம் தமிழர் தலைமுறை இடைவெளியால்**
**கடத்தப்படாமல் சிதைவடைந்து**
**அர்த்தம் ஏதுமின்றி - இப்போ**
**வெறும் ஆடம்பரக் கொண்டாட்டம்**
**களியாட்டம் வேடிக்கையில்**
**புகைப்படத்திற்காய் மட்டும்**
**அப்பப்போ வருவதை எண்ணி - என்**
**ஆழ்மனம் புண்பட்டு போகிறதே!**

**இழந்த தலைமுறை போக**
**இருக்கும் தலைமுறை**
**இனிவரும் தலைமுறைக்கு**
**இலைமறைகாயாய் ஒளியும்**
**இவ்வரிய தமிழர் பழக்கமதை**
**இயலுமானவரை வீட்டிலிருந்து**
**மீண்டும் மிளிர வைத்து**
**தனியே நூல்களிலே**
**இப்பண்பாட்டை புகழாது**



**நடைமுறை வாழ்வியலில்**
**நடைபோட வைக்க**
**இணைந்திடுவோம் அனைவருமே!**
**இது நம் கடமையும் என்றுரைப்போம்!**

**- றே.பூமகள் -**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்,**
**பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்)**

# காலன் ஒத்திவைத்த மரணம்!

## ஐ.தி. சம்பந்தன் வாழ்வும் பணிகளும்


## மொழிவழித் தொழிற்சங்கங்களை உயிர்ப்பிக்க ஒலித்த குரல் ஓய்ந்தது!



பிறக்கின்ற ஒவ்வொரு உயிருக்கும் மரணம் நிச்சயமானதுதான். எமது தமிழ் சமூகத்தில் ஒருவர் மரணம் எய்தி அமரத்துவம் அடைந்துவிட்டால், இயற்கை அநர்த்தத்தினால் அல்லது விபத்தினால், வேறு ஏதும் காரணங்களினால் கொல்லப்பட்டால், காலன் கவர்ந்துவிட்டான் என்போம்.

உயிரைக் கவர வரும் எமதர்மன், தனது செயலாளர் சித்திரகுப்தனிடம் ஒருவரை எவ்வளவு காலம் பூவுலகில் வைத்திருக்கலாம் எனக்கேட்டுத்தான் மரணத்தீர்ப்பை வழங்குவார் என எமது முன்னோர்கள் சொல்வார்கள்.

சித்திரகுப்தனின் கணக்குத்தவறி,




எமதர்மன் தனது கடமையைச் செய்யாமல் திரும்பிச்சென்றால், மரணிக்கவிருந்தவர் மயிரிழையில் உயிர் தப்பினார் என்ற பிரயோகமும் சமூகத்தில் பேசுபொருளாகியிருக்கிறது.

இம்மாதம் 03 ஆம் திகதி லண்டனில் தமது 87 ஆவது வயதில் இயற்கை எய்தியிருக்கும் மூத்த தொழிற்சங்கவாதியும், தமிழ் உணர்வாளரும், சமூகச் செயற்பாட்டாளரும், எழுத்தாளரும் , ஆவணப்பதிவாளருமான ஐ.தி. சம்பந்தன் அவர்கள், இங்கு குறிப்பிடப்பட்ட எமதர்மராஜனதும் அவரது செயலாளர் சித்திரகுப்தனதும் கணிப்பின் பிரகாரம் ஒத்திவைக்கப்பட்ட மரணத்தை அடைந்திருக்கிறார்.

இதனை வாசிக்கும் வாசகர்கள், அது என்ன ஒத்திவைக்கப்பட்ட மரணம்? எனக் கேட்கலாம். ஆம் அவர் 1985 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 02 ஆம் திகதியே முன்னாள் மானிப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் வி.தருமலிங்கம் மற்றும் ஆலாலசுந்தரம் ஆகியோருடன் எமதர்மனிடம் போய்ச் சேர்ந்திருக்கவேண்டியவர்.

அவர்களுடன், இவரையும் பரலோகம் அனுப்பவந்த தமிழ் இளைஞர்களிடமிருந்து தெய்வாதீனமாக உயிர்தப்பியவர். அக்காலப்பகுதியில் அத்தகைய கொலைகளைச் செய்பவர்களை இனந்தெரியாதவர்கள் என்றுதான் பத்திரிகை ஊடகங்கள் பதிவுசெய்தன.


எமதர்மனும் சித்திரகுப்தனும் அத்தகைய இனந்தெரியாதவர்களையும் எமது சமூகத்தில் வாழவைத்து, அதன் பின்னர் தம்மிடம் உரிய நேரம் வரும் போது அழைத்துக்கொள்வார்களோ என்றும் எண்ணத்தோன்றுகிறது.

ஐ.தி.சம்பந்தன் அவர்கள், தான் ஆழமாக நேசித்த ஈழத்தமிழ் மக்களுக்கு நேர்ந்த அனைத்து அவலங்களையும், அவர் நெருங்கிப்பழகிய பல தமிழ்த்தலைவர்களின் மரணங்களையும் பார்த்துவிட்டே இம்மாதம் நிரந்தரமாக கண்ணயர்ந்துவிட்டார்.

காரைநகர் களபூமியில் 26.06.1935 ஆம் திகதி மத்தியதர குடும்பத்தில் பிறந்திருக்கும் சம்பந்தன் அவர்கள், தமது இளமைக்காலம் முதலே தமிழர் உரிமை சார்ந்து இயங்கிய சமூகப்போராளி.

அவரை கொழும்பில் துறைமுக அதிகார சபையில் பணியாற்றிய எழுத்தாளரும், நாவலர் சபை, முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஆகியனவற்றில் முக்கிய பொறுப்புகளிலிருந்த (அமரர்) சோமகாந்தனைச் சந்திக்கச் செல்லும் சந்தர்ப்பங்களில் பார்த்து பேசியிருக்கின்றேன்.

அவர் தமிழ் எழுதுவினைஞர் சங்கத்தில் அங்கம் வகித்திருந்த காலப்பகுதியில் வீரகேசரிக்கும் அடிக்கடி





வந்து செய்திகள், செய்தி அறிக்கைகள் தருவார். அங்கு செய்தி ஆசிரியராக பணியாற்றிய டேவிட் ராஜூ, நீதிமன்ற நிருபர் வி.ஆர்.வரதராஜா ஆகியோருடனும் நட்புறவைப் பேணியவர்.

வருடத்தில் வரும் செப்டெம்பர் மாதங்களைத் தன்னால் மறக்கமுடியாது என்றும், அத்தகைய ஒரு மாதத்தில் 1985 ஆம் ஆண்டு, தான் எவ்வாறு உயிர்தப்பினார் என்பதை விரிவாக லண்டன் தேசம் நெற் ஜெயபாலனுக்கு ஒரு நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

சம்பந்தன், ஈழத் தமிழ் மக்கள் சார்ந்து ஆவணப்படுத்தல் பணிகளிலும் ஆக்கபூர்வமாக உழைத்திருப்பவர். அவர் எழுதிய நூல்கள் அதற்குச் சிறந்த சான்று.

1985 இல் அவர் உயிர்தப்பியிருந்தாலும், அதற்கு முன்பே 1958 இல் கொழும்பில் நடந்த கலவரத்தின்போதும் எவ்வாறு தெய்வாதீனமாக தான் உயிர் தப்பிய கதையையும், 2009 இல் எழுதி வெளியிட்ட Black July 83 :





Indictment (கறுப்பு யூலை 83 : குற்றச்சாட்டு) என்ற ஆங்கில – தமிழ் நூலிலும் விரிவாக பதிவுசெய்துள்ளார்.

இந்த நூல் இலங்கை அரசியல் வரலாற்றைப்படிக்க விரும்பும் மாணவர்களுக்கும், அரசியல் விமர்சகர்களுக்கும் உசாத்துணையாகவும் விளங்குகிறது.

தான் எழுதும் ஆவணங்களில் அவர் முக்கியமான அரிய ஒளிப்படங்களையும் தவறாமல் பதிவேற்றி ஆதாரம் காண்பிப்பதிலும் அக்கறை கொண்டிருந்தவர். அத்தகைய ஆவண ஏடுகளுக்காக அவர் செலவிட்ட நேரம் அதிகம். இது விடயத்தில் அவர் அயராத உழைப்பாளியாகவே திகழ்ந்தார்.

2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி காலை, கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்திற்கு வணங்கச் சென்றபோது சுட்டுக்கொல்





லப்பட்ட தமது ஊரைச் சேர்ந்தவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான தியாகராசா மகேஸ்வரன் அவர்களைப் பற்றியும் சம்பந்தன் ஒரு விரிவான நூலை எழுதியிருக்கிறார்.

மொழிவழி தொழிற்சங்களின் தேவையைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கும் சம்பந்தன், இது தொடர்பாக விரிவான பேட்டியையும் வீரகேசரிக்கு முன்னர் வழங்கியிருந்தார்.

1985 ஆம் ஆண்டிற்குப்பின்னர் செயல் இழந்துவிட்ட தமிழ் தொழிற்சங்கக் கூட்டணிக்கு மீண்டும் புத்துயிர்ப்பு வழங்கவேண்டும் என்பதும் சம்பந்தனின் வேண்டுகோளாகவிருந்தது.

தன்னால் இயன்றவரையில் ஈழத் தமிழ் இனத்திற்காக பல்வேறு வழிகளில் குரல் கொடுத்துவந்த ஐ. தி. சம்பந்தன் இம்மாதம் 03 ஆம் திகதியுடன் பேசுவதையும் எழுதுவதையும் நிறுத்திக் கொண்டார். அன்னாருக்கு எமது இதய அஞ்சலி.

**— முருகபூபதி —**



# தொழில் வாண்மை வழிகாட்டல் கருத்தரங்கு தமிழ் இளைஞர்களுக்கு மெய் நிகர் முறையில்

## 'அறிவு நம்பிக்கை நிதியம்' ஏற்பாட்டில் நாளை

மருத்துவம், பொறியியல், வர்த்தகம், அரசியல் போன்ற இன்னோரன்ன துறைகளில் நமது இளைஞர்களுக்குத் தொழில் வாண்மை வழிகாட்டலை வழங்குவதற்கான தொடர் நடவடிக்கைகளை பிரிட்டனை மையமாகக் கொண்டு இயங்கும் 'அறிவு நம்பிக்கை நிதியம் - ஐக்கிய இராச்சியம்' மேற்கொண்டுள்ளது.

அறிவையும் பிற உதவிகளையும் தேடும் இலங்கை மற்றும் ஐக்கிய இராச்சியத் தமிழர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்கும் உயரிய இலக்கோடு ஸ்தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது அறிவு நம்பிக்கை நிதியம்.

நரேந்திரன், கணேந்திரன், நந்தன ஆகியோரின் வழிகாட்டலில் இயங்கும் இந்த நிதியம் நாளை சனிக்கிழமை நம் இளைஞர்களுக்கான தொழில்வாண்மை வழிகாட்டல் நிகழ்வு ஒன்றை (Careers Guidance) மெய்நிகர் வழியில் முன்னெடுக்கின்றது.

பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் மிக்க விற்பன்னர்கள் இந்நிகழ்வில் துறை சார்ந்த தொழில்வாண்மை வழிகாட்டல்களை இளைஞர்களுக்கு இலவசமாக வழங்க உள்ளனர்.

நாளை சனிக்கிழமை ஐக்கிய இராச்சிய நேரப்படி காலை 11 மணிக்கும், இலங்கை நேரப்படி மாலை 3.30 மணிக்கும் இந்த மெய்நிகர் வழி தொழில்வாண்மை வழிப்படுத்தல் நிகழ்வு ஆரம்பமாகும்.

தொடக்க உரையைத் 'தனித்துவம்' என்ற தலைப்பில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் ஆற்றுவார். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் ஆர்.செந்தில்மாறன் விசேட உரையையும் நடராஜா சச்சிதானந்தன் ஆசி உரையையும் ஆற்றுவர்.

பொறியியல் துறை குறித்து சன் தியாகராஜா, அரசியல் குறித்து சென் கந்தையா, மருத்துவத் துறை குறித்து வைத்தியகலாநிதி மயூரன் சண்முகநாதன், சட்டத் துறை குறித்து சொலிஸிட்டர் செந்தூரன் இரவீந்திரதாஸ், சட்ட கையாளுகை குறித்து ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம், வியபாரத் துறை குறித்து வர்த்தகர் சண்முகநாதன் ஹரிகரன், கணக்கியல் மற்றும் வரிவிதிப்புத் துறை குறித்து பிரதீபன் வேலாயுதம் ஆகியோர் வழிகாட்டல் கருத்துகளை வழங்குவர். (இந்த மெய்நிகர் நிகழ்வுக்கான கூட்ட அடையாள எண் 518 894 93 13, கடவுச்சொல் ARIVU)

தமிழ்ப் பாடசாலைகளின் அதிபர்கள் மெய்நிகர் மூலமான இந்தத் தொழில்வாண்மை வழிகாட்டல் நிகழ்வின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவற்றில் தமது உயர்தர வகுப்பு மாணவர்கள் தவறாது பங்குபற்றி பயனடைகின்றமையை உறுதிப்படுத்துமாறு அறிவு நம்பிக்கை நிதியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

---

## 'சம்மன்' இல்லாமல் ..........

### யாருக்காக?

இதை விட முக்கியமான ஒரு கேள்வி உண்டு. எதனையும் ஆராய்ந்து அறிந்து, ஆழ்ந்து யோசித்து விட்டு மட்டுமே அது குறித்து கருத்துக் கூறும் சுமந்திரன் ஏன் இப்போது மட்டும் இல்லாத பிரச்சினையைக் கிளப்பி அதற்காக வாங்கி கட்டிக் கொண்டார்? யாருக்காக அவருடைய இந்த முஸ்தீபு?

ஒரு விதத்தில் யோசித்து பார்த்தால், மலையக தமிழர் அரசியலில் தற்போது முன்னிலையில் இருக்கும் மனோ கணேசன் போன்ற மூத்த, முந்தைய தலைமுறையினருக்கு வக்காலத்து வாங்கும் விதமாகவா, சுமந்திரன் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியைச் சாடினார்? அவ்வாறு பார்த்தால், அண்மை காலத்தில் மனோ கணேசன் போன்ற தமிழ் பேசும் பிற இனங்களைச் சேர்ந்த கட்சித் தலைமைகளை, தமிழரசு கட்சிதான் கடைசி நேரத்தில் காலை வாரி விட்டு அசிங்கபடுத்தியது எனலாம்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கடிதம் எழுதும் முகமாக செல்வம் அடைக்கலநாதன் முன்னெடுத்த முயற்சியில், ஒரு காலகட்டத்தில் உள்ளே இழுக்கப்பட்ட மனோ கணேசன் மற்றும் அவரை விட அரசியலில் மூத்த ரவூப் ஹக்கீம் ஆகிய இருவரையும் கூட்டமைப்பு பின்னர் கழற்றி விட்டமை மிகப்பெரிய அவமதிப்பு. வடிவேலு பாணியில் சொல்வதென்றால், அவர்கள் பாட்டுக்கு, தேமேன தானே போய் கொண்டிருந்தார்கள்.

### கை நழுவிய வாய்ப்பு?

இனப்போர் முடிந்த காலகட்டத்தில், அனைத்து மலையகத் தமிழர் கட்சிகளையும் ஒரே அணிக்குள் கொண்டு வருவதற்கு ஒரு முயற்சி முன்னெடுக்கப்பட்டது. அந்த கூட்டங்களில் முன்னணித் தலைவர்கள் யாரும் பங்கெடுக்கவில்லை என்றாலும், அவர்களுடைய பிரதிநிதிகளை அனுப்பி வைத்திருந்தனர் என்று செய்திகள் தெரிவித்தன. அந்தப் பேச்சுகள் அடுத்த கட்டத்திற்குப் போகாதமைக்கு யாரையும் தனிப்பட்ட முறையில் குறை கூறிவிட முடியாது என்றும், அப்போதைய செய்திகள் தெரிவித்தன.

இடைப்பட்ட காலத்தில், தனக்கும் மனோ கணேசனுக்கும் கொள்கை ரீதியாக எந்தப் பிரச்சினையும் கிடையாது என்றும், இருவரது வழிமுறைகள் மட்டுமே வேறுபட்டுள்ளன என்றும் ஆறுமுகன் தொண்டமான் கூறி வந்தார். அதாவது, கேட்டு வாங்க வேண்டும் என்பது தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் வழி. போராடிப்பெற வேண்டும் என்பது மனோ கணேசன் போன்றோரின் வழி முறை. அவ்வளவுதான் வித்தியாசம் என்றும் அவர் கூறி வந்துள்ளார்.

உண்மை என்னவோ, அன்றைய சூழலில் யார் பெரியவன் என்ற தனி நபர் சார்ந்த ஈகோ பிரச்சினையும் இருந்தது. இன்று மாறுபட்ட சூழலில், அனைத்து மலையகத் தரப்புகளையும் ஓரணியில் திரட்டுவதற்கான வாய்ப்பு மீண்டும் தோன்றி உள்ளது எனலாம். அதற்கு, வெளியில் இருந்து முன்னெடுப்புகளை செய்வதற்கு, சுமந்திரனை விட்டால் வேறு யாரும் இல்லை என்ற நிலை இருந்தது எனலாம். ஆனால், தற்போது தொழிலாளர் காங்கிரஸ் கட்சியை அவசியமில்லாமல் அவர் சீண்டிய காரணத்தால் நல்லதொரு வாய்ப்புக் கை நழுவிப் போய்விட்டது என்று விசனப்பட வேண்டும்.

### காணாமல் போன அறிவிப்பு

இனப்போர் முடிந்தும் வட மாகாணம் இராணுவத்தினரின் கீழ் இருந்த காலகட்டத்தில், அப்போது அமைச்சராக இருந்த ஆறுமுகன் தொண்டமான் பிறிதொரு முயற்சியையும் முன்னெடுத்தார். போர் பகுதியில், குறிப்பாக வன்னியில் இனப்போரால் பாதிக்கப்பட்ட மலையகத் தமிழர்கள் குறித்துக் கணக்கெடுத்து, அவர்களுக்கு தனியாக அரசு உதவி செய்ய வேண்டும் என்று அவ்வப்போது கூறி வந்தார்.

இதற்காக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அனுமதியுடன் தங்களது கட்சியைச் சார்ந்த ஒரு குழுவையும் வட மாகாணத்திற்கு அனுப்பி வைக்கப் போகிறார் என அறிவிப்பு வெளியிட்டார். ஆனால், பாவம், வழக்கமான அவரது பிற அறிவிப்புகள் போலவே இதுவும் காணாமல் போய்விட்டது.

இது தவிர, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியை வளர்க்க வேண்டும் என்றும் ஆறுமுகன் தொண்டமான் அடிக்கடி பேசி வந்தார். அவரது கூற்றின் படி, அவரது தாத்தா சௌமியமூர்த்தி தொண்டமான் காலம் தொட்டே வட மாகணத்தில், தொழிலாளர் காங்கிரஸ் கட்சிக்கு ஓர் அலுவலம் இருந்து வந்தது. அது நன்றாகச் செயல்பட்டும் வந்தது. இனப்போர் துவங்கிய காலம் முதல் அந்த அலுவலகம் செயலிழந்து போய் விட்டது.

இன்று, தொழிலாளர் காங்கிரஸ் கட்சி அந்த அலுவலகத்தை தேடி, கண்டு பிடித்து மீண்டும் செயல்பட வைக்கலாம். ஏன், வடக்கு மாகாண தேர்தலில் கூட போட்டி இடலாம். இதே எண்ணம், மனோ கணேசன் போன்றோருக்கும் அவ்வப்போது தோன்றி வந்துள்ளது. என்ன, ஒவ்வொரு தேர்தல் காலத்திலும், தலைநகர் கொழும்புவில் 'குட்டி யாழ்ப்பாணம்' எனறு அறியப்படும் வெள்ளவத்தை பகுதியில் உள்ள வடக்கு - கிழக்கு தமிழர்களின் வாக்கை குறிவைக்க வேண்டிய காரணத்தால், இது குறித்த தனது அறிவிப்புகளை, அறிவிப்புகளாகவே நிறுத்திக் கொண்டுள்ளார். அவ்வளவு தான்!

---

## 2,000 க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் ஹர்த்தாலுக்கு ஆதரவு!

சுகாதாரம், போக்குவரத்து, ரயில்வே, மின்சாரம் மற்றும் கல்வித் துறைகளில் உள்ள நூற்றுக்கணக்கான தொழிற்சங்கங்கள் உட்பட 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகள் இன்று (வெள்ளிக்கிழமை) நாடுதழுவிய ஹர்த்தாலுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளதாக தொழிற்சங்க ஒருங்கிணைப்பு மையம் தெரிவித்துள்ளது.

இன்று நடைபெறும் ஹர்த்தாலுக்கும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் கூட்டுப் போராட்டத்துக்கும் பதில் கிடைக்காவிட்டால் மே 11ஆம் திகதி முதல் அரசாங்கம் வீட்டுக்குச் செல்லும் வரை தொடர் வேலை நிறுத்தமும் தொடர் ஹர்த்தாலும் தொடரும் என தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இன்று ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக ஆசிரியர் - அதிபர்கள் தொழிற்சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் மேலும் பல தொழிற்சங்கங்களுடன் இணைந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். மேலும் அரசாங்கத்திற்கு தமது அதிருப்தியை வெளிப்படுத்த ராஜகிரிய சந்தியில் ஒன்று கூடவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாடு தழுவிய ரீதியில் நடைபெறும் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கும் முகமாக நள்ளிரவு முதல் நாடு தழுவிய 24 மணித்தியால ரயில் தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக இலங்கை ரயில்வே தொழிற்சங்க கூட்டமைப்பின் இணை அழைப்பாளர் எஸ்.பி.விதானகே தெரிவித்தார்.

நள்ளிரவு 12 மணிக்கு ஆரம்பிக்கும் பணிப்புறக்கணிப்பு இன்று நள்ளிரவு 12 மணிக்கு நிறைவடையும் என அவர் தெரிவித்துள்ளார்.

'40 இற்கும் மேற்பட்ட ரயில்வே தொழிற்சங்கங்கள் இந்த வேலை நிறுத்தத்தில் கைகோர்க்கும். ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள், ரயில்வே தொழிற்சங்கங்களுக்கு ஆதரவு அளிக்கும். வேலைநிறுத்தத்தின் போது, நாடு முழுவதும் ரயில்கள் இயங்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாடு தழுவிய ஹர்த்தாலில் ஈடுபடப் போவதில்லை என்றும், அனைத்து பஸ் உரிமையாளர்களும் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ப ஹர்த்தாலில் கலந்து கொள்வதற்கான சுதந்திரத்தை வழங்கியுள்ளோம் என்றும் மாகாணங்களுக்கு இடையிலான தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், 20 முதல் 25 கிலோமீற்றர் தூரம் வரை பயணிக்க போதுமான டீசலை வழங்கும் அதே வேளை, அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபடும் இளைஞர்களுக்கு இலவச பஸ் வசதிகளை வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் முன்னதாக தெரிவித்துள்ளது.

இதேவேளை, பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் இன்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு பல அத்தியாவசிய சேவைகளின் தொழிற்சங்க பிரதிநிதிகள் ஆதரவளிப்பதில்லை எனத் தீர்மானித்துள்ளதாக ஊடகப் பிரிவின் தலைவர் தெரிவித்தார்.

---

## கஞ்சாவுடன் சென்றவரை மடக்கிபிடித்து பொன்னாலை இளைஞர்கள் சாதனை!

பொன்னாலை ஊடாக காரைநகருக்கு கஞ்சா கொண்டு சென்றவரை இளைஞர்கள் மடக்கிப் பிடித்து பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்ற போது குறித்த நபர் கஞ்சாவையும் கைத்தொலைபேசியையும் கைவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் புதன்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. அது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

நபரொருவர் கஞ்சா கொண்டு செல்கின்றார் என பொன்னாலையைச் சேர்ந்த இளைஞர்கள் சிலருக்கு கிடைத்த தகவலை அடுத்து அவரை வழிமறித்த இளைஞர்கள் விசாரணை நடத்தினார்கள். இதன்போது அவரிடம் கஞ்சா இருந்தமை கண்டறியப்பட்டது.

அவரை வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்காக கொண்டு சென்ற போது திடீரென்று அவர் காரைநகர் நோக்கி மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றார்.

இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில், சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸாரிடம் கஞ்சாவும் கைத்தொலைபேசியும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கைத்தொலைபேசியை வைத்து குறித்த நபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, பொன்னாலை கரையோர வீதியூடாக கஞ்சா பரிமாற்றம் இடம்பெறுவதாக தகவல்கள் கிடைத்துள்ளமையால் சந்தேக நபர்களை மடக்கிப் பிடிப்பதற்கு பிரதேச இளைஞர்கள் தொடர்ந்தும் விழிப்புடன் செயற்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நேற்று நாடாளுமன்றத்தில் நடந்தது என்ன?



நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பிரதி சபாநாயருக்கான தேர்வில், சுயாதீன அணிகளின் சார்பில் களமிறக்கப்பட்ட, நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய வெற்றிபெற்று, பிரதி சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அவருக்கு ஆதரவாக 148 வாக்குகள் அளிக்கப்பட்டன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் களமிறங்கிய இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு ஆதரவாக வாக்குகள் 65 வழங்கப்பட்டன. 3 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

சபாநாயகர் அறிவிப்பு, அமைச்சுகளின் அறிக்கைகள் முன்வைப்பு, பொது மனுதாக்கல், 27/2 இன்கீழான எதிர்க்கட்சித் தலைவரின் விசேட அறிவிப்பு, அதற்கு நிதி அமைச்சரின் பதில் ஆகியன முடிவடைந்த பின்னர் முற்பகல் 10.45 மணியளவில் பிரதி சபாநாயகர் பதவிக்கான தேர்வு இடம்பெற வேண்டும் என்ற அறிவிப்பை சபாநாயகர் விடுத்தார்.

இதன்போது, பிரதி சபாநாயகர் பதவிக்காக – நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் 11 கட்சிகளின் சார்பில், ரீலங்கா சுதந்திரக்கட்சியின் எம்.பியும், முன்னாள் பிரதி சபாநாயகருமான ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவின் பெயர் முன்மொழியப்பட்டது.

சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் சிறிபாலடி சில்வாவால், ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவின் பெயர் முன்மொழியப்பட்டது. அதனை சுசில் பிரேமஜயந்த வழிமொழிந்தார்.

ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில், பிரதி சபாநாயகர் பதவிக்கு எவரும் போட்டியிடவில்லை. ஆளுங்கட்சி ரஞ்சித் சியம்பலாப்பிட்டியவை ஆதரிக்கும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் சபையில் அறிவித்தார்.

இதனையடுத்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில், இம்தியாஸ் பாக்கீர் மாக்காரின் பெயர், பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டாரவால் முன்மொழியப்பட்டது. இதனை எதிரணி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியல்ல வழிமொழிந்தார்.



பிரதி சபாநாயகர் பதவிக்கு இருவரின் பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதால், வாக்கெடுப்பை நடத்துவதற்காக ஐந்து நிமிடங்களுக்கு, சபாநாயகரால் அழைப்பு மணி ஒலிக்கவிடப்பட்டது. அதன்பின்னர் இரகசிய வாக்கெடுப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாக்குச்சீட்டு வழங்கப்படும். அதில் தாம் விரும்பும் வேட்பாளரின் பெயரை சரியாக எழுத வேண்டும். தமது கையொப்பத்தையும் சரியாக இடவேண்டும். பெயர் சரியாக எழுதப்படாவிட்டாலோ அல்லது கையொப்பம் இடப்படாவிட்டாலோ வாக்குச்சீட்டு நிராகரிக்கப்படும். என சபாநாயகர், அனைத்து எம்.பிக்களும் தெரியப்படுத்தினார்.

அவ்வேளையில் எம்.பிக்கள் கையொப்பம் இடுவதாக இருந்தால், எப்படி இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும்? என ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், சபாநாயகரிடம் கேள்வி எழுப்பினர்.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளையில் அப்படிதான் ஏற்பாடு உள்ளது, அதன் பிரகாரம்தான் தேர்வு நடத்தப்படும். எது எப்படி இருந்தாலும் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படும். என சபாநாயகர் திட்டவட்டமாக அறிவித்து, வாக்கெடுப்பை ஆரம்பிக்குமாறு ஆணையிட்டார். 2018 இலும் இப்படிதான் தேர்வு இடம்பெற்றது என ஆளுங்கட்சியினர், சபாநாயகரின் முடிவை ஆமோதித்தனர்.

இதனையடுத்து ஆளும் மற்றும் எதிரணியினருக்கு 'வெற்றுப் பெட்டி' காண்பிக்கப்பட்டு , சபாபீடத்துக்கு முன்பாக வாக்குப் பெட்டி வைக்கப்பட்டது. ஒவ்வொரு எம்.பியின் பெயரும் , நாடாளுமன்ற பிரதி செயலாளர் நாயகத்தால் அழைக்கப்பட – சம்பந்தப்பட்டவர்கள், வாக்களிப்புக்காக ஒதுக்கப்பட்ட இடத்துக்கு வந்து, வாக்குச் சீட்டில் தாம் ஆதரிக்கும் உறுப்பினரின் பெயரை எழுதி, கையொப்பம் இட்டு, வாக்குச்சீட்டை வாக்குப்பெட்டியில் இட்டனர்.

நண்பகல் 12. 28 மணியளவில் வாக்களிப்பு நிறைவுபெற்றது. சபாபீடத்தில் வைத்து, சபாநாயகர் முன்னிலையில், நாடாளுமன்ற செயலாளர், பிரதி செயலாளர்களின் பங்களிப்புடன் வாக்குகள் எண்ணப்பட்டன. பின்னர் ஒரு மணியளவில் தேர்தல் முடிவை சபாநாயகர், அறிவித்தார்.

இதன்படி சுயாதீன அணிகளின் சார்பில் களமிறங்கிய ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய 148 வாக்குகளையும், எதிரணி சார்பில் களமிறங்கிய இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் 65 வாக்குகளையும் பெற்றனர். அந்தவகையில் பிரதி சபாநாயகராக ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவுசெய்யப்பட்டார். இதற்கு முன்னரும் அவரே அப்பதவியை வகித்தார்.

அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், அஜித் ராஜபக்ஷவை, பிரதி சபாநாயகர் பதவிக்கு களமிறக்க ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முன்னதாக திட்டமிட்டிருந்தது. எனினும், இன்று காலை நடைபெற்ற நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தில் அம்முடிவு திடீரென மாற்றப்பட்டது. பிரதி சபாநாயகருக்கான தேர்வில் தோல்வி ஏற்பட்டால், அது அரசுக்கு மேலும் பின்னடைவாக அமையும் என்பதாலும், சுயாதீன அணிகளுக்கு நேசக்கரம் நீட்டும் வகையிலும் மொட்டு கட்சி தந்திரோபாக பின்வாங்கலை மேற்கொண்டது.

அதேவேளை, வாக்களிப்பின்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தான் யாருக்கு வாக்களித்தார் என்பதை காண்பிக்கும் வகையில், வாக்கு சீட்டை எதிரணி பக்கம் சிறிது நேரம் காண்பித்தார். பிரதமருக்கும் அந்த வாக்குச்சீட்டை காண்பித்தார். எதிர்க்கட்சித் தலைவரின் இந்த செயலை சபாநாயகர் கண்டித்தார். 'இரகசிய தன்மை' குறித்து பேசிவிட்டு, இவ்வாறு செயற்படுவது ஏற்புடைய நடவடிக்கை அல்லவெனவும் சுட்டிக்காட்டினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன், வினோநோதராதலிங்கம், சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் வாக்களிப்பு வேளையில் சபையில் பிரசன்னமாகி இருக்கவில்லை.

காலைக்கதிர் Kalaikkathir

## நாடு இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் ஜனாதிபதியும் அரசாங்கமும் மக்களின் கோரிக்கைக்குச் செவி சாய்க்காமல் எதேச்சாதிகாரமாக ஆட்சி புரிந்து வருகின்றனர்.

மக்களின் கோரிக்கைக்கு மதிப்பளிக்காமல் தன்னிச்சையாகச் செயற்பட்டு வரும் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் எதிராகக் கடந்த 28ஆம் திகதி வியாழக்கிழமை அரச, தனியார் மற்றும் பெருந்தோட்டத்துறை ஊழியர்களின் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இணைந்து நாடளாவிய ரீதியில் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் இதன் தொடர்ச்சியாக இன்று நாடளாவிய ரீதியில் பூரண ஹர்த்தாலை முன்னெடுப்பதற்கு தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைப்பு நிலையம் அழைப்பு விடுத்துள்ளது.

சுகாதாரம், போக்குவரத்து, ரயில்வே, மின்சாரம், கல்வி உட்பட்ட இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட குழுக்கள் அடங்கிய சிவில் அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் இன்றைய ஹர்த்தாலுக்குத் தமது பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளன.

இன்றைய ஹர்த்தாலுக்கு ஆதரவாக நேற்று நள்ளிரவு முதல் இன்று நள்ளிரவு வரை ரயில்வேத் தொழிற்சங்கத்துடன் இணைந்த சுமார் 40 தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

மேலும் இன்றைய ஹர்த்தாலுக்கு தமது ஒத்துழைப்பை வழங்கும் வகையில் நேற்று நள்ளிரவு முதல் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தினரும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

வங்கித் தொழிற்சங்கங்கள், இலங்கை மின்சார சபை, இலங்கை போக்குவரத்துச் சபை, அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரும் இன்றைய ஹர்த்தாலில் பங்கேற்க உள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

சுகாதாரத் துறை ஊழியர்களும் இன்று வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ள அதே நேரத்தில் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மருத்துவர்கள் கையில் கறுப்புப் பட்டி அணிந்து இன்றைய வேலை நிறுத்தத்திற்கு ஆதரவளிப்பார்கள்.

இன்று நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்ற ஹர்த்தாலுக்கு ஆதரவாக வர்த்தகர்கள் தங்கள் கடைகளை மூடி ஒத்துழைக்குமாறும், பொதுமக்கள் தங்கள் வீடுகளில் கறுப்புக் கொடிகளை ஏற்றிவைக்குமாறும் தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது.

அனைத்து மத வழிபாட்டுத் தலங்களும் காலை 8.30 மணி முதல் 9.00 மணி வரை ஒலிபெருக்கி மூலம் பிரார்த்தனைகளை நடத்துமாறும் ஹர்த்தால் மற்றும் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடுபவர்கள் வன்முறையில் ஈடுபடுவதையோ அல்லது பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பதையோ தவிர்த்து அமைதியான முறையில் போராட்டங்களைத் தொடருமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியும் அரசாங்கமும் பொது மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து நடவடிக்கை எடுப்பதற்குத் தவறினால் 11 ஆம் திகதி முதல் தொடர்ச்சியான ஹர்த்தாலாக இது மாற்றப்படும் எனவும் தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் எச்சரித்துள்ளது.

---

## நாடாளுமன்றச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பல்கலைக்கழக மாணவர்கள் அரசாங்கத்திற்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமது எதிர்ப்பினை வெளியிட்டனர்.

அங்கு அமைக்கப்பட்டிருந்த வீதித் தடைகளைத் தகர்த்து மாணவர்கள் உள்நுழைய முற்பட்ட நிலையில் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டிருந்ததுடன் கலகம் அடக்கும் பொலிஸாரினால் கண்ணீர்ப் புகைக் குண்டுத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனால் அந்தப் பகுதியில் கடும் வாகன நெரிசலும் ஏற்பட்டது.

## தமிழக முதல்வர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சூழ்நிலையில் கடும் சிரமத்திற்கு ஆளாகி உள்ள மக்களுக்கு தமிழ்நாட்டிலிருந்து உணவு, அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் உயிர் காக்கும் மருந்துகள் அனுப்பி வைக்கப்படும் என்று தாங்கள் அறிவித்துள்ளமை தங்களது நல்லெண்ணத்தைக் குறித்து நிற்கின்றது.

இலங்கைப் பொருளாதார நெருக்கடியை அண்டை நாட்டுப் பிரச்சினையாகப் பார்க்காது மனிதாபிமான அடிப்படையில் நோக்கும் தங்களுக்கும் தமிழ்நாடு மாநில அரசுக்கும் இலங்கை மக்கள் சார்பாக மிகுந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன். – என்றுள்ளது.

---

## தயாசிறி ஓரினத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொழும்பு காலிமுகத்திடலில் இளைஞர்களின் தன்னெழுச்சிப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

காலிமுகத்திடலில் அமைந்துள்ள அமரர் பண்டாரநாயக்கவின் சிலையின் கண்ணக் கறுப்பு நிறத் துணியினால் கட்டி, இனவாதத்தைத் தூண்டும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக் கப்பட்டுள்ளன எனவும், இச்செயலானது நாட்டில் வன்முறையைத் தூண்டுவதற்காக அடிப்படைவாதத் தமிழர்கள் இதை முன்னெடுத்துள்ளனர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினரும், ஶ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செயலாளருமான தயாசிறி குற்றம் சாட்டியுள்ளார்.

“தயாசிறி ஓர் இனத்தை அடையாளப்படுத்திக் குற்றம் சுமத்துவதை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்ள வேண்டும். அந்த நபரின் கேவலமான செயற்பாட்டுக்கு அவரே முழு பொறுப்புக் கூற வேண்டும். அவருடைய இந்தக் கேவலமான செயலை நாங்களும் வன்மையாகக் கண்டிக்கிறோம். தமிழர் தரப்பினர் மீது இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

“பொருளாதார பிரச்சினைக்கும் அமரர் பண்டாரநாயக்கவுக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லாத போதிலும் அவர்களை அவமதிப்பது நாகரீகமற்ற செயல் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை. இந்தச் செயலில் ஈடுபட்டவர்கள் மீது பாரபட்சம் இன்றி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இ.தொ.கா. வலியுறுத்துகின்றது.

“மூவின மக்களும் காலிமுகத்திடலில் ஒற்றுமையாக இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கின்றார்கள். நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடியான சூழலில் இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான வழிகளைக் கண்டறிய வேண்டுமே தவிர, மேலும் மேலும் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதற்கான செயற்பாடுகளில் ஈடபடக்கூடாது” – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

---

## நல்லூர் கந்தசுவாமி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கொண்டு ஆலய நடைமுறைகளை அவர் நேரில் கண்டுள்ளார். நேற்றுமுன்தினம் தமிழகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் கீழ்கண்டவாறு தெரிவித்தார்:–

நல்லூர் கந்தசுவாமி கோயில் 13 நூற்றாண்டுகள் பழமை வாய்ந்த கோயிலாகும். இவ்வாலயமானது தனி ஓர் அறங்காவலரால் நடத்தப்படுகிறது. அங்கிருந்த அர்ச்சகர்கள் தட்டில் காசு கொடுத்தும் வாங்கவில்லை. அர்ச்சனைக்கு ஒரு ரூபா மட்டும்தான். உண்டியலில் மட்டும்தான் பணம் போட முடியும். வி.ஐ.பிக்கள் அல்லது வி.ஐ.பிக்கள் அல்லாதவர் என்று எதுவும் இல்லை. எல்லோரும் ஒரே வரிசைதான். சொன்ன நேரத்துக்குப் பூஜை – ஒரு நிமிடம் கூடப் பிந்தாமல். தமிழகத்திலும் அப்படி ஒரு சட்டம் கொண்டு வர முடியுமா? – என்று கேள்வி எழுப்பினார்.

# நாடாளுமன்ற வளாகத்தில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலையானவர்களுக்கு வரவேற்பு!

நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டபோது கைதுசெய்யப்பட்ட 13 பேரும் தலா ஒரு லட்சம் ரூபா சரீர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடுவெல நீதிவான் சனிமா விஜேபண்டார புதன்கிழமை மாலை இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இதனையடுத்து, வெளியில் வந்த அவர்களுக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்துக்கு முன்பாக அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தலங்கம பொலிஸாரால் புதன் மாலை கைது செய்யப்பட்டனர்.

10 ஆண்களும் இரண்டு பெண்களும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவா தெரிவித்தார்.

அத்தோடு, நாடாளுமன்றத்தின் தனி நுழைவாயிலில் தனியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஒருவரும் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கஜ முத்துக்களை சட்டவிரோதமாக விற்பனை செய்ய முற்பட்டவர் அம்பாறையில் கைதானார்

அம்பாறை – பொத்துவில் – அறுகம்பை பகுதியில் சட்டவிரோதமாக கஜ முத்துக்களை விற்பனை செய்ய முற்பட்ட ஒருவர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய புதன்கிழமை இரவு அறுகம்பை டொப்ரென் வீதியிலுள்ள தனியார் விடுதி ஒன்றில் விற்பனைக்காக எடுத்து செல்லப்பட்ட போது குறித்த பகுதியை சுற்றிவளைத்த விசேட அதிரடிப்படையினர் சூட்சுமமான முறையில் சந்தேகநபருடன் உரையாடி அவரைக் கைது செய்தனர்.

இதன்போது கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து யானை கஜ முத்துக்கள் (07) சிற்பி முத்து. (06) என்பன மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதையடுத்து சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ‘கோட்டா கோ கம’ போராட்டக்காரர்கள் தேர்தல் ஆணைக்குழு தலைவருடன் சந்திப்பு

கொழும்பு, மே 06

கோட்டா கோ கம போராட்டக்களத்தில் இருந்து ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுவொன்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவாவை சந்தித்துள்ளது.

இந்த சந்திப்பில் நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை தொடர்பாக நீண்ட நேரம் கலந்துரையாடியதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போதைய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு எந்த வகையான நடவடிக்கை அல்லது தலையீட்டை எடுக்கலாம் என்பது தொடர்பாக இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் கவலை வெளியிட்டனர்.

தற்போதைய நிலைமை தொடர்பாக மக்கள் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளின் கவனத்தை ஈர்ப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரை தலையிடுமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர் எனப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# திடீர் காய்ச்சல் காரணமாக 11 மாதக் குழந்தை சாவு!

திடீர் காய்ச்சல் காரணமாக 11 மாதக் குழந்தை உயிரிழந்துள்ளது.

கொடிகாமம் தவசிக்குளத்தைச் சேர்ந்த சாந்தகுமார் விஸ்வந் என்ற ஆண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

குழந்தைக்கு காய்ச்சல் இருந்தமையால் பனடோல் கொடுக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 2 மணிக்கு காய்ச்சல் கடுமையாக இருந்தமையால் குழந்தை மிருசுவில் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

மேலதிக சிகிச்சைக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட போது குழந்தை ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் இறப்பு விசாரணையை மேற்கொண்டார்.

---

## நாடாளுமன்றத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸார் கண்ணீர் புகை பிரயோகம் நடத்தியிருந்தனர்.

மேலும், நேற்று முன்தினம் இரவு முதல் நாடாளுமன்ற வளாகத்தை அண்மித்த வீதி முழுமையாக மூடப்பட்டிருந்தது.

நேற்றைய ஆர்ப்பாட்டத்தின் போது, பொலிஸாரினால் அமைக்கப்பட்ட இரும்பு கம்பிகளுடனான வேலிகளை மாணவர்கள் உடைத்தெறிந்திருந்தனர்.

இவ்வாறான பின்னணியில், நாடாளுமன்ற வளாகத்தை ஒட்டி தற்போது 'ஹொரு கோ கம' என்ற பெயரிலான மாதிரி கிராமம் அமைக்கப்பட்டுள்ளது.

# மொரட்டுவவில் துப்பாக்கி சூடு! ஒருவர் காயம்

மொரட்டுவ – ஏகொட உயண பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் இளைஞரொருவர் காயமடைந்துள்ளார்.

புதன்கிழமை ஏகொட உயண பொலிஸ் பிரிவில் கொரலவெல்ல பிரதேசத்தில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான நபர் பாணந்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு காயமடைந்த நபர் 27 வயதுடைய அழுபோமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவராவார்.

மேற்படி நபர் பிரிதொருவருடன் சந்தைக்குச் சென்று கொண்டிருந்த போது மொரட்டுவை பகுதியிலிருந்து மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டவர்கள் யார், அதற்கான காரணம் என்பன தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரி வித்துள்ளது.

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

